விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 சுக்கில ஸூ மாசி மீ 23-ம் உ புதன்கிழமை (07 - 03 - 1990) ஹிஜ்ரி 1410 ஷஃபா 09 ஓசை 17

# "ஈழப் பிரகடனத்தை கைவிட வேண்டும்"

## பெருமாளைக் கேட்கிறார் இந்தியத் தூதுவர்

(கொழும்பு)

**இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணசபை ஒருதலைப்பட்சமாக ஈழப்பிரகடனம் செய்ததை அதன் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கைவிட வேண்டுமென்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. எல். எம். மெர்ஹோத்ரா கேட்டுள்ளார்.**

நாட்டில் அமைதி ஏற்பட திரு. வரதராஜப்பெருமாள் பாடுபட வேண்டுமென்றும் இந்தியத் தூதுவர் கூறியிருக்கிறார்.

1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டபடி ஜனநாயக அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு திரு. வரதராஜப்பெருமாள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டுமென்றும் இந்தியா ஒருபோதும் ஈழக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டதில்லையெனறும் தூதுவர் மெர்ஹோத்ரா கூறினார்.

"இந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தூதுவர் மெர்ஹோத்ரா மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கமாட்டாதென்பதை இந்தியா எப்போதுமே தெட்டத்தெளிவாகவே கூறிவந்திருக்கிறது.

இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் இந்தியா ஆதரிக்கிறது. இக்கொள்கைக்கு அமைய இந்தியா எந்த விதமான ஈழக்கோரிக்கையையும் ஆதரிக்கமாட்டாது. இலங்கையில் இயக்கங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துவதற்கு இந்தியா முயற்சி செய்யவில்லை.

மார்ச் மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் இலங்கையில் உள்ள இந்திய அமைதி காக்கும் படை முற்றாகத் திருப்பி அழைக்கப்பட்டுவிடு மென்றும் தூதுவர் மெர்ஹோத்ரா தெரிவித்தார்.

## மார்ச் 17ஆம் தேதிக்குள் இந்தியப்படை வெளியேறும்

(சென்னை)

இலங்கையில் எஞ்சியுள்ள ... ணங்களும், பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களும் உரிய ... வெளிவரும் தினமணிப் பத்திரிகை இச்செய்தியை வெளி

## பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ், ஆசிரியர் பயிலுநராக நியமனம் பெற்றவர்களுக்கு நாளை எட்டாம் திகதி யாழ் கல்வித்திணைக்களத்தில் நியமனக் கடிதம் வழங்கப்படும் என்று

ஈ. பி. ஆர். எல். எவ்.

# "ஈழப் பிரகடனம், மோசடி நகைப்புக் கிடமானது!"

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கண்டனம்

(கொழும்பு)

**"ஈ. பி. ஆர். எல். எவ் நிர்வாகத்தினால் செய்துள்ள ஒரு தலைப்பட்ச ஈழப்பிரகடனம் மோசமானது, நகைப்பிற்கிடமானது, பொறுப்பற்றது" என்று தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையில் கண்டித்துள்ளது.**

இந்த ஈழப் பிரகடனம் சட்டப்படியான குறிக்கோளை அடைவதற்கு மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள போராட்டத்தை கோடிட்டுக் காட்டும் செயலாகும் என்று மக்கள் முன்னணி குற்றம் சாட்டியிருக்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.இயக்கத்தினரும் ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தினரும் வெளி நாட்டுச் சக்திகளின் கைப்பொம்மைகளாக இருப்பதுடன் எமது மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கவில்லையென்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தனது அறிக்கையில் குற்றம் சாட்டியிருக்கிறது.

### "மக்கள் ஆணையைப் பெறவில்லை"

இவ்விரு இயக்கத்தினரும் மக்களின் பிரதிநிதிகளல்ல என்றும் இவர்கள் இப்படி ஈழப் பிரகடனம் செய்வதற்கு மக்களின் ஆணையைப் பெற்றவர்களுமல்லவென்றும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அறிக்கை கூறுகிறது.

வரதராஜப் பெருமாளின் மாகாண நிர்வாகம் ஜனநாயக ரீதியாக அமைந்ததல்ல, முன்னைய இந்திய அரசினாலும் இந்திய அமைதி காக்கும் படையினாலும் அமைக்கப்பட்ட இந்த நிர்வாகம் இன்று முற்றிலும் சீர்குலைந்து கிடக்கிறது. வெகுவிரைவில் இந்தியப்படை முற்றாக வெளியேறியதும் மாகாண சபை நிர்வாகம் வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாதது.

மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தை எதிர்க்கும் சூழ்நிலையை ஏற்படுத்தி தமது அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்குமாகவே வரதராஜப் பெருமாள் இந்தப் பிரகடனத்தைச் செய்திருக்கிறார். இதனால் தான் அவர் மாகாண சபையைக் கலைத்திருக்கிறார் என்பதை ஊகிக்க முடிகிறதென்பதும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தனது அறிக்கையில் தெரிவிக்கிறது.

### தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள்

ஏனைய இயக்கங்களைப் போலன்றி தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கடந்த பதினாறு வருடங்களாகத் தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள். தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்ற வகையில் இனப்பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக வழியில் சிந்திக்கத் தொடங்கியதுடன், தமிழ் பேசும் மக்களின் பூரண ஆதரவையும் பெற்றுள்ளனர். புதிதாகத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் இந்த உண்மை சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியவரும்.

ஜனாதிபதியுடன் நடந்து வரும் பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் அர்த்தபுஷ்டியுள்ளதாக நடைபெற்று வருவதால் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்று காணுவதற்குப் பேச்சுவார்த்தைகள் உதவுமென்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அறிக்கை தெரிவிக்கிறது.

## "புலிகளின் கட்டுப்பாட்டில்"

(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் முற்றாகவே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் எச். எல். குணசேகரா நேற்றுப்

## மாத்தயா - முப்படைத் தளபதிகள் சந்திப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் தொடர்பாக நேற்று இரவு ஏழு மணிக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் ... நுட்ப அமைச்சர் ஹமீத்தும் முப்படைகளின் தளபதிகளும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப் பேச்சு வார்த்தையின் போது பிரதான அம்சமாக

**ஈழப்பிரகடனம் செய்ததை அதன் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கைவிட வேண்டுமென்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. எல். எம். மெர்ஹோத்ரா கேட்டுள்ளார்.**

நாட்டில் அமைதி ஏற்பட திரு. வரதராஜப்பெருமாள் பாடுபட வேண்டுமென்றும் இந்தியத் தூதுவர் கூறியிருக்கிறார்.

1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டபடி ஜனநாயக அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு திரு. வரதராஜப்பெருமாள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டுமென்றும் இந்தியா ஒருபோதும் ஈழக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டதில்லையென்றும் தூதுவர் மெர்ஹோத்ரா கூறினார்.

''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தூதுவர் மெர்ஹோத்ரா மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிக்கமாட்டாதென்பதை இந்தியா எப்போதுமே தெட்டத்தெளிவாகவே கூறிவந்திருக்கிறது.

இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் இந்தியா ஆதரிக்கிறது. இக்கொள்கைக்கு அமைய இந்தியா எந்த இடையே பிளவை ஏற்படுத்துவதற்கு இந்தியா முயற்சி செய்யவில்லை.

மார்ச் மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் இலங்கையில் உள்ள இந்திய அமைதி காக்கும் படை முற்றாகத் திருப்பி அழைக்கப்பட்டுவிடுமென்றும் தூதுவர் மெர்ஹோத்ரா தெரிவித்தார்.

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ், ஆசிரியர் பயிலுநராக நியமனம் பெற்றவர்களுக்கு நாளை எட்டாம் திகதி யாழ் கல்வித்திணைக்களத்தில் நியமனக் கடிதம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மார்ச் 17ஆம் தேதிக்குள் இந்தியப்படை வெளியேறும்

(சென்னை)

இலங்கையில் எஞ்சியுள்ள அமைதிப்படை முழுவதும் மார்ச் 12 முதல் மார்ச் 17ம் திகதிக்குள் விலக்கிக் கொள்ளப்படும் என நம்பப்படுகிறது. மார்ச் 31 க்குள் இலங்கையில் இருந்து வெளியேற இந்தியா முன்னதாக திட்டமிட்டு இருந்தது. கிழக்கிலங்கையில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டுமே உள்ள இந்தியப்படை வீரர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும் பணி கடந்த மூன்று தினங்களில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பகுதியில் பலாலி விமானநிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த இந்திய அமைதிப்படை முகாம் ஞாயிறு அன்று மூடப்பட்டது. இந்திய அமைதிப்படை இலங்கைக்கு சென்ற காலம் முதல் இதுவரை சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்ட வாகனங்களும், பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களும் உரியவர்களிடம் திருப்பித்தர அமைதிப்படை உயர் அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். தெல்லிப்பளையில் உள்ள இலங்கை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இவைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வாகனங்களையும் பொருட்களையும் சொந்தக்காரர்கள் இவற்றை அலுவலகத்தில் இருந்து அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

காங்கேசன் துறையிலும், பலாலியிலும் முகாம்களில் தங்கியிருந்தவர்கள் ஓரிரு நாட்களில் கப்பல் மூலமாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மார்ச் 12 க்கு இடையில் திருகோணமலையில் உள்ள இந்தியப்படை முற்றாக வெளியேறி விடும் எனத் தெரிகிறது. (சென்னையிலிருந்து வெளிவரும் தினமணிப் பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.)

# மேன்முறையீடு விசாரணை திகதிகளில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பயிலுனர் ஆசிரியர் தெரிவு தொடர்பாகச் செய்யப்பட்ட மேன் முறையீடுகள் பற்றிய விசாரணைகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை வேலணை ஆகிய பகுதிகளிலிருந்து மேன் முறையீடு செய்தவர்களுக்கான விசாரணை நேற்று முன் தினம் ஆரம்பமாகி நேற்றுவரை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசாரணைகள் முடிவு பெறவில்லை

(6ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் இயக்கத்தினர் கடந்த பதினாறு வருடங்களாகத் தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள். தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்ற வகையில் இனப்பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக ஜனாதிபதியுடன் பேச்சு தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக வழியில் சிந்திக்கத் தொடங்கியதுடன், தமிழ் பேசும் மக்களின் பூரண ஆதரவையும் பெற்றுள்ளனர். புதிதாகத் தேர்தல் நடத்தப்பட்ட பின்னர் இந்த உண்மை சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியவரும்.

ஜனாதிபதியுடன் நடந்து அர்த்தபுஷ்டியுள்ளதாக நடைபெற்று வருவதால் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்று காணுவதற்குப் பேச்சுவார்த்தைகள் உதவுமென்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அறிக்கை தெரிவிக்கிறது.

## ''புலிகளின் கட்டுப்பாட்டில்''

(கொழும்பு)

வடக்கும் கிழக்கும் முற்றாகவே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் எச். எல். குணசேகரா நேற்றுப் பாராளுமன்றத்தில் நடந்த ஈழப்பிரகடன விவாதத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

# மாத்தயா - முப்படைத் தளபதிகள் சந்திப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் தொடர்பாக நேற்று இரவு ஏழு மணிக்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் மாத்தயாவும் இலங்கை உயர் கல்வி விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் ஹமீத்தும் முப்படைகளின் தளபதிகளும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப் பேச்சு வார்த்தையின் போது பிரதான அம்சமாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்புக் குறித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ''ஈழத்தை பாதுகாத்து நிர்வகிக்கும் பலம் பெருமாளுக்கு இல்லை'' - ஹமீத்

(கொழும்பு)

தனிப்பட்ட குழுவொன்று தன்நாடு ஒன்றைப் பிரகடனம் செய்கையில் அப் பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நிர்வகிக்கக் கூடிய ஆற்றல் இருக்குமாயிருந்தால் தான் அபபிரகடன அறிவித்தல் பெரிய சவாலாக அமையும் என்று உயர் கல்வி விஞ்ஞான அமைச்சரும், முன்னாள்வெளிவிவகார அமைச்சருமான ஏ. ஸி, எஸ் ஹமீத் நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை ஒருதலைப் பட்சமாக ''ஈழப் பிரகடனம்'' செய்தது பற்றிப் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விசேஷ விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் ஹமீத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரதேசத்தையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு என்றும் அமைச்சர் ஹமீத் கூறினார்.

வடக்கு - கிழக்கு மாகாண மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சர் ஹமீத் மேலும் பேசுகையில் தனிப்பட்ட பிரதேசத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நிர்வகிக்கும் அதிகாரம் ஈ. பி. ஆர். எல். எவ். குழுவுக்குக் கிடையாது என்றார். ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் அலுவலகக் கட்டிடத்துக்குள் தான் அதற்கு ஆதரவு இருக்கிறதென்றும் வடக்கிலும் கிழக்கிலும் இப்பொழுது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதென்றும் கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் ஏற்கனவே இயங்கத் தொடங்கியுள்ளன என்றும் அமைச்சர் கூறினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ''புலிகளின் மிரட்டலால் அகதிகள் செல்வது என்பது உண்மையல்ல''

- ஈரோஸ் பாலகுமார்

**வடக்கு கிழக்கில் இருந்து ஏனைய இயக்கங்களைச் சேர்ந்தவர்களின் குடும்பங்கள் அகதிகளாக இந்தியாவிற்கு செல்வதற்கு விடுதலைப் புலிகள் அவர்களை இம்சைப்படுத்துவதுதான் காரணம் என்ற குற்றச்சாட்டை ஈழவர் ஜனநாயக முன்னணி (ஈரோஸ்) செயலாளர்நாயகம் வே. பாலகுமார் மறுத்துள்ளார்.**

அண்மையில் வடக்கு கிழக்கு மகாணத்தில் இருந்து இந்தியாவிற்கு அகதிகள் வெளியேறி வருவதாகச் செய்திகள் வெளிவருகின்றன. இவ்வாறு வெளிவேறுபவர்கள் அநேமாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவத்துடன் இருந்து செயற்பட்டு வந்தவர்களும், அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வெளியேறியவர்கள் இந்தியாவில் அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் மகாண சபை அரசின் உயர் அதிகாரிகள் சீனக் குடாவில் இருந்து விமானத்தில் இந்தியாவிற்குச் செல்லத் தயாராகி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி இந்திய அதிகாரிகளிடம் கேட்டபோது இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் படிப்படியாக கால ஒழுங்கின்படி வெளியேறி வருவதாலும், வடக்கு கிழக்கில் இருந்து அகதிகள் வெளியேறுவதற்கும் இந்தியப் படைகள் வெளியேறுவதற்கும் தொடர்பு எதுவும் இல்லை எனத் தெரிவித்தார்.

## சீரணி நாகம்மாள் இராஜகோபுரம்

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு ஐந்து தளங்களைக்கொண்ட இராஜகோபுரமும், கல்யாண மண்டபமும் அமைக்கப்பட்டு வருகின்றது. யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் இங்கு வந்து வழிபடும் அடியார்கள் இக் கட்டிட வேலைகளுக்கு நிதியுதவியளித்து வருகிறார்கள். மேலும் இவ்வேலைகள் விரைவாக நடைபெற பக்தர்களின் நல்லுதவிகள் கிடைக்கும் என்று ஆலய பரிபாலனசபையில் எதிர்பார்க்கின்றார்கள்.

## திக்கம் வடிசாலை திறப்பு விழா

(யாவ்ப்பாணம்)

திக்கம் வடிசாலை எதிர் வரும் 9ம் திகதி வெள்ளியன்று திறக்கப்படவுள்ளது. இவ்வடிசாலை லிபரேஷன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இரு நேரப் பாடசாலை

# எப்போது நடைமுறைக்கு வருமென முடிவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளை இரு நேரப் பாடசாலையாக்கும் திட்டத்தை கொள்கையளவில் யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏற்றுள்ளார் என்று கல்வித் திணைக்கள உயர் அதிகார்ரி திரு, தங்கராசா நேற்று ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே கல்வி அமைச்சின் சுற்று நிருபப்படி பாடசாலைகள் இரு நேரப் பாடசாலைகளாக இயங்கி வந்தன என்றும், சமீப காலங்களில் நாட்டில் நிலவிய குழப்ப நிலை காரணமாக மாணவர்கள் பற்றோர், ஆசிரியர்களின் நலன்கருதிப் பாடசாலைகளை ஒரு நேரப் பாடசாலை ஆக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றார்.

இதேவேளை, இரு நேரமாக்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவதில் பல சிரமங்களிருக்கின்றன. நாடு வழமைக்குத் திரும்பியுள்ளதென்றாலும், பாடசாலைப் பிள்ளைகளின் போக்குவரத்துஒழுங்கு, மதிய போசனம் இத் திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்துவதில் பெற்றோருக்கு உள்ள கஷ்டங்களையும் கருத்திற்கொண்டு நாம் செயலாற்ற வேண்டியுள்ளது.

ஆகவே இது எப்போது நடைமுறைக்கு வரும் என்பது தொடர்பாக கல்வித் திணைக்களம் ஒரு முடிவும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக எவ்வித சுற்று நிருபமும் நாம் அனுப்பவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# புனாவையில் பஸ்களில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்த இரு தனியார் பஸ்களில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இக் கொள்ளைச் சம்பவத்தில் ஆயுதந் தாங்கிய இளைஞர்கள் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மதவாச்சிக்கும் வவுனியா

(6ஆம் பக்கம் பார்க்க )

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனி கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டா மா, கோதுமை அரிசிக்குறுணல், கோதுமை அரிசி றவை எங்களிடமும், பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M.G. M. No- 777. K. K. S. Road. JAFFNA.

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு இயற்கைப் பொருட்களடங்கிய ''சீயாக்காய்ப் பவுடர்'' எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M., No. 777, K. K. S. Road, JAFFNA. B 120

வீடும் காணியும் விற்பனை

5 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு வெறும் காணியாகவும், வீடும் காணியாசவும், பிரித்தும் விற்பனை செய்யப்படும். விபரங்களுக்கு இல.18, இராமநாதன் வீதி, நாயன்மார் கட்டு, நல்லூார். மன்மதராஜன், இல.68, அத்தியடிபுதுவீதி, யாழ்ப்பாணம். B.115

### றோனியோ

தரமான றோனியோ பிரதிகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள நம்பிக்கை நிறுவனம் ''கிளீன் கட்''

### தேவை

பிளேட்டின் மெஷின் மைன்டர், கொம்பசிட்டர் தேவை. நேரில் வரவும். வேலை பயில விரும்பும் இருபாலாரும் தேவை ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.

### தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கபடும். K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. (B- 119)

## சர்வதேச பெண்கள் தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் நடாத்தும் சர்வதேச பெண்கள் தினம் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் வே. அருணோதயம் தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் கருத்தரங்கு, கவியரங்கு என்பன நிகழவுள்ளன. கருத்தரங்குக்கு கலாநிதி. நா. சுப்பிரமணியன் தலைமை தாங்குவார். கவியரங்கத்திற்கு சோ. பத்மநாதன் தலைமை தாங்குவார்.

## புத்தகக் கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் ஸ்ரீஇராமகிருஷ்ணர் ஸ்ரீ விவேகானந்தா புத்தகங்களின் இலவச கண்காட்சி ஒன்றை இன்று (7-3-90) காலை சாவகச்சேரி நகர் கொத்தனி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ணா சாரதா சேவாச்சிமத்தின் ஆதரவில் இந்த இலவச புத்தக கண்காட்சி நடைபெறுகிறது. 3


மக்களின் தேவைக்கேற்ப, நியாய விலையில்

தரமான பொருட்களை வழங்குவது,

# சுன்னாகம்

# ப. நோ. கூ. சங்கம்

வளர்ந்து வரும் மக்களின் தேவைகளைப் புரிந்துணர்வின் மூலம், தளராத கூட்டுறவுக் கொள்கைகளின் உறுதிப்பாட்டுடன் சேவை புரியும் சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் நிறைந்த பயனை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்

(B/186)


## நுண்கலை மன்றப் பரீட்சைகள்

வட இலங்கை நுன்கலை மன்றத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் பரீட்சைகள் எதிர்வரும் மார்ச் 17, 18 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன. இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முதலாம் தரத்திற்கு மார்ச் 17 சனிக்கிழமையும், இரண்டாம் மூன்றாம் தரங்களுக்கு மார்ச் 17, 18, இரு தினங்களிலும் பரீட்சை நடைபெறும். 2, 3, ஆம் தரங்களுக்கு செயல்முறைப் பரீட்சையும், கலை மதிப்பீடு அறிமுகப் பரீட்சையும் நடைபெறும். சிற்பமாக்கல் செயற்பாடுகளுக்கு பரீட்சை முடிவடைந்தவுடனேயே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

1990 ஒக்ரோபரில் மீண்டும் அடுத்த பரீட்சையில் 1, 2, 3, 4, ஆம் தரங்களுக்கு நடத்தப்படும் எனவும் 1991 இல் 4ஆம் தரம் சித்தியடைந்தோர் ஆசிரியதரப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சித்திர ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க மேற்படி பரீட்சைகள் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறன.

## மீண்டும் பஸ்சேவை

(தீவுப்பகுதி)

கிளிநொச்சியிலிருந்து குறிகாட்டுவானுக்கு மீண்டும் பஸ் சேவையை ஆரம்பித்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி டிப்போ அத்தியட்சகர் திரு. ஏ. தியாகராசாவின் முயற்சியை தீவுப் பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். கடந்த சில வருடங்களாக குறிகாட்டுவான் - உருத்திரபுரம் பஸ் சேவை அப்போதிருந்த சூழ்நிலை காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது நிலைமைகள் சீரடைந்து வருவதனால் இச்சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவையினால் தீவுப்பகுதி வாழ் மக்கள் மகிழ்ச்சியும், வரவேற்பும் தெரிவித்துள்ளனர். (15)

## இன்றைய சினிமா

75 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

பனை அபிவிருத்திச் சபையும்,

பிளேட்டின் மெஷின் மைன்டர், கொம்பசிட்டர் தேவை. நேரில் வரவும். வேலை பயில விரும்பும் இருபாலாரும் தேவை ஸ்ரீ வாணி அச்சகம் அச்சுவேலி.

### தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கபடும். K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு.

(B- 119)

*************

வளர்ந்து வரும் மக்களின் தேவைகளைப் புரிந்துணர்வின் மூலம், தளராத கூட்டுறவுக் கொள்கைகளின் உறுதிப்பாட்டுடன் சேவை புரியும் சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தின் நிறைந்த பயனை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்

(B/186)

அத்தியட்சகர் திரு. ஏ. தியாகராசாவின் முயற்சியை தீவுப் பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். கடந்த சில வருடங்களாக குறிகாட்டுவான் - உருத்திரபுரம் பஸ் சேவை அப்போதிருந்த சூழ்நிலை காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது நிலைமைகள் சீரடைந்து வருவதனால் இச்சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவையினால் தீவுப்பகுதி வாழ் மக்கள் மகிழ்ச்சியும், வரவேற்பும் தெரிவித்துள்ளனர். (15)

ராஜாதி ராஜா

(கலர்)

12ஆவது வாரம்

வெலிங்டன் (யாழ்)

தினசரி

10. 30, 2. 30 6. 30

★ கார்த்திக் ★ குஷ்பு

வருஷம் 16

(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)

10. 30, 2. 30, 6. 30

கமலஹாசன் -- சுஜாதா

அவள் ஒரு தொடர்கதை

## பனை அபிவிருத்திச் சபையும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனமும் இணைந்து நடாத்தவுள்ள

# வேலைவாய்ப்பு, தொழிற்பாட்டுக் கண்காட்சி

ஒன்று

மே தினத்தன்று யாழ்நகரில் நடைபெறவுள்ளது!

பனம் மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட நவீன கைப்பணி, தொழில்நுட்ப அறிவுப்போட்டிகளும் இடம் பெறும்.

வெளிநாட்டுப் புலமைப் பரிசில் உட்படப் பல்வேறு பரிசுகளைப் பெறும் வாய்ப்புக்களுண்டு.

**விபரங்களுக்கு**

செயலாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
(தலைமைக் காரியாலயம்)
இல: 47, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்
பனை அபிவிருத்திச் சபை

B-179

# காஷ்மீர் நெருக்கடி வலுக்கின்றது
## நான்கு இராணுவத்தினர் பலி

(ஸ்ரீநகர்)

இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் நான்கு பாதுகாப்புப் படையினர் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டார்கள். மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரில் ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காவற்படையினரை முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்கினார்கள். இத் தாக்குதலின் போதே இப்படையினர் சுடப்பட்டதாக கூறப்படுகின்றது. பொருட்கள் வாங்குவதற்காக மூன்று மணி நேரம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட அவ்வேளையிலேயே இச் சம்பவம் நடைபெற்றது.

கடந்த முதலாம் திகதி இந்திய ஆட்சி நடப்பதைக் கண்டித்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்டம் செய்தபோது பொலிசார் சுட்டதில் 30 பேர் கொல்லப்பட்டதும் அதனைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் காலவரையறை அற்ற ஊரடங்குச் சட்டத்தை அமுல் படுத்தியதும் தெரிந்ததே இவ் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டவேளையிலேயே முஸ்லிம் தீவிர வாதிகள் இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதே வேளை முஸ்லிம் தீவிரவாதிகள் சென்றஆண்டு முதல் தனிநாடு கோரி போராடி வருகிறார்கள். இவர்களின் போராட்டத்தினால் ஜம்மு காஷ்மீரில் வாழும் ஆயிரக்கணக்கான இந்துக்களும், சீக்கியர்களும் வெளியேறி விட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

# நீர்மூழ்கி பேர ஊழலில் இந்திய அரசு அக்கறை

(நியூ டெல்லி)

இந்தியாவின் ஆயுத பேரம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகத்தின் முன்னாளைய அதிகாரிகள் ஐந்துபேர் மீது மத்திய புலனாய்வுத் துறை (CBI) குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறது. 1981ஆம் ஆண்டு மேற்கு ஜேர்மனியில் இருந்து நான்கு நீர்மூழ்கிக் கப்பல் வாங்கியது தொடர்பான குற்றச்சாட்டுக்களே இவையாகும். ராஜீவ் அரசாங்கத்தின் மீது போபேர்ஸ் பீரங்கி பேர ஊழலை அடுத்து வெளிவந்த குற்றச் சாட்டு இதுவாகும்.

மேலும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தம் தொடர்பாக மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் விசாரிக்க உத்தரவிட்ட பின்னரே பாதுகாப்பு அமைச்சர் பதவியை வி.பி.சிங் ராஜினாமாச் செய்தார். அப்போது ராஜீவ் காந்திக்கு எதிராக அவர் சதி செய்வதாக குற்றம் சாட்டப்பட்டது. போபர்ஸ் ஆயுத பேர ஊழல் தொடர்பாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த ஒரே மாதத்தில் இக் குற்றப்பத்திரிகை வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீனியர் தொடர்பான அமெரிக்க சமாதான திட்டத்தை இஸ்ரேல் ஏற்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் - பலஸ்தீனிய சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக அமெரிக்கா முன்வைத்த திட்டத்தை இஸ்ரேலியப் பிரதம மந்திரி ஏற்றுக் கொள்ள விரும்புவதாக இஸ்ரேல் தொலைக் காட்சி கடந்த சனியன்று ஒளிபரப்பியது.

இஸ்ரேல், அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜேம்ஸ் பேக்கரின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், பேக்கருடன் இஸ்ரேல் - எகிப்திய உயர் அதிகாரிகள் வாஷிங்டனில் கலந்துபேசி கெய்றோ செல்லவிருக்கும் பலஸ்தீனிய குழு பற்றித் தீர்மானிக்கப் படலாம் என நம்பப் படுகிறது. இவ் வாஷிங்டன் சந்திப்புக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஜேம்ஸ் பேக்கர் கவனிப்பாராம்.

இஸ்ரேலியப் பிரதமர் சாமீர் யேக்ஸ் பேக்கரின் ஆலோசனைக்கு ஆக்கபூர்வமான பதிலளிப்பார் என இஸ்ரேலியக் கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு கட்சிகளான லிக்கிட், தொழிற் கட்சி வட்டாரங்கள் கூறியதாக இஸ்ரேல் தொலைக் காட்சிச் செய்தி அறிக்கை கூறியது.

தற்சமயம் இஸ்ரேலிய ஆட்சிக்குட்பட்டிருக்கும் மேற்குக் கரைகஸாப்ற்றிஸ் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பதிவு செய்யப்பட பலஸ்தீனியர்களைப் பேச்சுவார்த்தைக்கு அனுப்புவது பற்றிய கபினற் தீர்மானிப்பதில் கெய்றோல் பேச்சு வார்த்தையில் தங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வாஷிங்டன் இச் செய்தி பற்றிக் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ளது. இஸ்ரேலியப் பிரதமரின் வெகுஜன தொடர்புச் சாதன ஆலோசகரும் இது பற்றி எதுவித கருத்தும் சொல்ல மறுத்துள்ளார்.

செய்றோப் பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் இயக்கம் தெரிவிக்கும் பட்சத்தில், இஸ்ரேல் தன்னுடன் இணைத்து வைத்திருக்கும் கிழக்கு ஜெருசலேமையும் பேச்சு வார்த்தைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் கோரிக்கை முளையிலேயே நிராகரிக்கப்பட்டுவிடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# "காஷ்மீர் பிரச்சினைக்கு மக்கள் மூலம் தீர்வு"

-வி. பி. சிங்

(புதுடில்லி)

''காஷ்மீர் பிரச்சினைக்கு மக்கள் மூலம் தீர்வு காணப்படும்'' என்று பிரதமர் வி. பி சிங் கூறினார். மத்திய ரிசேவ் பொலிஸ் படையின் பொன்விழா திங்கட்கிழமை புதுடில்லியில் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பிரதமர் கலந்துகொண்டு ஆயுதப்படை, பொலிஸ் அணி வகுப்பை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சிக்குப் பின் நிருபர்களுக்கு பேட்டியளித்த பிரதமர் கூறியதாவது.

காஷ்மீர் பிரச்சினையை மிகவும் மோசமாக்கியது முன்னைய அரசுதான். அதை தேசிய முன்னணி அரசு தத்து எடுத்திருக்கிறது. காஷ்மீர் பழைய நிலைக்கு திரும்ப மக்களுடன் நாம் ஒத்துழைக்க விரும்புகிறோம். அங்கு மக்களின் நடவடிக்கையை ஆய்வு செய்யவேண்டும், தேசிய முன்னணி அரசு பதவியேற்றதன் பிறபு காஷ்மீர் விவகாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

கே. எல்லையில் ஆக்கிரமிப்பு வேகமடைந்துள்ளதே?

ப: எந்த மிரட்டலையும் சந்திக்க நாம் தயாராக இருக்கிறோம். ஆகவே மிரட்டல் இருப்பதை நாம் உணரவில்லை.

கே: போபர்ஸ் பீரங்கி பேரத்தில் லஞ்சம் வாங்கியவர்களின் பெயர் எப்போது அறிவிக்கப்படும்.

ப: இதுபற்றி சி. பி. ஐ. விசாரணை தொடர்ந்து நடத்தி வருகிறது. சட்டம் தனது வழியில் செல்லும்.

கே: மேகம்ப தொகுதி மறு தேர்தல் பற்றி ஜனதா தள்க்கட்சி யோசனை பண்ணுமா?

ப: அங்கு மறுதேர்தல் நடத்தும்படி தேர்தல் கமிஷனை ஏற்கெனவே ஜனதா தள் வற்புறுத்தியுள்ளது. கட்சியில் மோதல் நடந்ததாக கூறுவது கற்பனையே என்று அவர் கூறினார்.

## பரிசுபெறும் சிறுகதை

'தகவம்' காலாண்டுக்கு ஒரு முறை நடாத்திவரும் சிறுகதை மதிப்பீட்டில் பி வரும்கதைகள் 1989 - ஏப்பிரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் வெளிவந்தனவற்றுள் சிறந்தவைஎனத்தெரிவு பெற்றுள்ளன

முதற்பரிசு (ரூ.150/-)பெறும் கதை- 'தண்ணீர்த்தொட்டி' எழுதியவர் மா.பாலசிங்கம். கதைபிரசுரமான சஞ்சிகை மல்லிகை.

இரண்டாம் பரிசு (100/-) பெறும் கதை - 'வம்சத் வம்சம்' எழுதியவர் அல்அஸூமத் பிரசுரமான பத்திரிகை திசை.

# சோவியத்தில் முப்பது மொழிகளில் பாரதி பாடல்

(கொழும்பு)

சோவியத் நாட்டில் எழுபது மொழிகளில் நூல்கள் வெளியாகின்றன. முப்பது மொழிகளில் மகாகவி பாரதியாரின் கவிதைகள் வெளியிடப்பட்டுள்ளன இன்னும் நாற்பது மொழிகளில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். மகாகவி பாரதி சோவியத் மக்களின் போற்றுதலுக்கும் வணக்கத்துக்குமுரிய கவிஞராவார்.

இவ்வாறு சோவியத் நாட்டு கவிஞரான அனதொல பார்ப்பரா பேசும் போது குறிப்பிட்டார்.

இலங்கை வந்துள்ள சோவியத் எழுத்தாளர்களான அனதொலா பார்ப்பரா, வியச்சிஸ்லாவ் குப்பிரியானோவ் ஆகியோரை கௌரவிக்குமுகமாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்து கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு தேனீர் விருந்தொன்றை அளித்தது.

இந்து சமய கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் இராஜாங்க அமைச்சர் திரு. பி பி. தேவராஜ் பேசும் பொழுது ''நம் நாட்டு எழுத்தாளர்களின் படைப்புகளும் மொழிப்பெயர்க்கப்பட வேண்டும். சிங்கள நாவல்கள் தமிழிலும், தமிழ் நூல்கள் சிங்களத்திலும் மொழிப் பெயர்க்கப்பட வேண்டும். அதற்கு எமது அமைச்சு உதவி செய்யும்'' என்றார்

சோவியத் எழுத்தாளரான குப்ரியானோவ் விழாவில் பேசினார். ரஷ்ய மொழிப் பேச்சை செல்வி தவமணிதேவி தமிழில் மொழிப் பெயர்த்தார் (27)

# "முஸ்லிம்களின் பங்கு என்றும் மறக்க முடியாது"

(சாவகச்சேரி)

''விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் யாப் அமைப்பில் முஸ்லிம் சகோதரர்களின் பிரதிநிதித்துவமும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. எமதுபோராட்டக் காலங்களில் எம்முடன் இருந்து தோளோடு தோள் கொடுத்து உழைத்த முஸ்லிம் சகோதரர்களில் பலர் வீர மரணம் எய்தினர். பலர் இன்

பலர் கலந்து கொண்டனர். அரசியல் பொறுபபாளர் திரு. பாப்பா மேலும் கூறியதாவது:

எமது போராட்டக் காலங்களில் முஸ்லிம் சகோதரர்களின் பங்களிப்புகளை எமது விடுதனலப் புலிகளின் மக்கள் முன்னணி என்றும் மறந்து விட முடியாது. தீய பிற் போக்கு சக்தியினால் வேண்டுமென்றே தூண்டி விடப்பட்ட

கடந்த காலங்களில் சகலரிடத்திலுமே தவறுகள் இருந்திருக்கலாம். இந்த தவறுகளை சகலருமே உணர்ந்து கொள்ளும் பட்சத்தில் தமிழீழ விடுதலை ஒரு சாதாரண விடயமாக அமைந்துவிடும். இந்திய இராணுவத்தின்ஆக்கிரமிப்பு போராட்டங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் குரல் கொடுத்த முஸ்

## கைதடி விக்னேஸ்வரா இல்லப் போட்டிகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

''வாழ்க்கையில் சுகதேகியாக இருப்பதற்கு விளையாட்டு மிகவும் அவசியம். அதனாலேயே இன்று ஒரு பாடமாகக் கூட பாடசாலையில் படிப்பிக்கப்படுகின்றது'' என்று கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ் கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா குறிப்பிட்டார்.

அதிபர் திரு. தி, ஆர். தேவ பாலசுந்தரம் தலைமையில்

# நிபந்தனையற்ற பேச்சுக்கு நேர்மையுடன் சென்றோம்

(சாவகச்சேரி)

''இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இருந்த இலங்கை அரசு அதே கொள்கையும், அதே உறுதிப்பாடும் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவும், நிபந்தனை இல்லாப் பேச்சு வார்த்தை நடத்தவும் வலிந்து

இந்தியாவினால் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுத்தர முடியாது. எமது சுயநிர்ணய உரிமையை நாமே தான் அரசியல் ரீதியாகவோ அல்லது போராட்ட ரீதியாகவோ வென்றெடுக்க வேண்டும். இந்திய இராணுவம் இலங்கையைவிட்டு உடனடியாக

கொண்டு எம் இனிய தமிழினத்திற்கு சொல்லொணாத் துயரைக் கொடுத்த சிலரும் இருக்கின்றனர். எம்மைப்பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டனர். ஆனால் எமது இயக்கமோ மக்களோடு மக்களாக இணைந்து கிராமங்கள் தோறும் அப்பாவித் தமிழ் மக்களுடனேயே வாழ்ந்து

களே இவையாகும். ராஜீவ் அரசாங்கத்தின் மீது போபேர்ஸ் பீரங்கி பேர ஊழலை அடுத்து வெளிவந்த

பாக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த ஒரே மாதத்தில் இக் குற்றப்பத்திரிகை வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கூறியது.

தற்சமயம் இஸ்ரேலிய ஆட்சிக்குட்பட்டிருக்கும் மேற்குக் கரைகஸாப்ற்றிஸ் ஆகிய பகுதி

பிரபு காஷ்மீர் விவகாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது.

யில் மோதல் நடந்ததாக கூறுவது கற்பனையே என்று அவர் கூறினார்.

லாவ் குப்பிரியானோவ் ஆகியோரை கௌரவிக்குமுகமாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்து கலாசார தமிழ்

னார். ரஷ்ய மொழிப் பேச்சை செல்வி தவமணிதேவி தமிழில் மொழிப் பெயர்த்தார் (27)

# "முஸ்லிம்களின் பங்கு என்றும் மறக்க முடியாது"

(சாவகச்சேரி)

''விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் யாப் அமைப்பில் முஸ்லிம் சகோதரர்களின் பிரதிநிதித்துவமும் முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. எமதுபோராட்டக் காலங்களில் எம்முடன் இருந்து தோளோடு தோள் கொடுத்து உழைத்த முஸ்லிம் சகோதரர்களில் பலர் வீர மரணம் எய்தினர். பலர் இன்னமும் எம்முடனிருந்து உழைத்து வருவதை நாம் என்றும் மறந்துவிட முடியாது''.

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. எஸ். பி. கே. பாப்பா சாவகச்சேரி முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பாக சந்தித்து உரையாடிய முஸ்லிம் பிரமுகர்கள் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

சாவகச்சேரி பிரதேச காரியாலயத்தில் நடந்த இந்தச் சந்திப்பில், சாவகச்சேரி முஹதீன் ஜும்மா பள்ளிவாசல் நம்பிக்கை பொறுப்பாளர் சபைத் தலைவர் ஜனாப் அ. அபூபக்கர், உப தலைவர் ஜனாப் கே. எம். றஹீம், இணைப்பு செயலாளர் ஜனாப் மொசமட் தஜீப், ஜனாப் எம். பீ. அஸிஸ், உப செயலாளர் ஜனாப் ஏ. எஸ். சுபுஹான், பொருளாளர் ஜனாப் என். சகரியா உட்பட பலர் கலந்து கொண்டனர். அரசியல் பொறுபபாளர் திரு. பாப்பா மேலும் கூறியதாவது:

எமது போராட்டக் காலங்களில் முஸ்லிம் சகோதரர்களின் பங்களிப்புகளை எமது விடுதனலப் புலிகளின் மக்கள் முன்னணி என்றும் மறந்துவிட முடியாது. தீய பிற்போக்கு சக்திகளால் வேண்டுமென்றே தூண்டி விடப்பட்ட கலவரங்கள், இனிமேல் எந்தக் கோணத்திலும் இடம் பெற முடியாது.

கடந்த காலங்களில் சகலரிடத்திலுமே தவறுகள் இருந்திருக்கலாம். இந்த தவறுகளை சகலருமே உணர்ந்து கொள்ளும் பட்சத்தில் தமிழீழ விடுதலை ஒரு சாதாரண விடயமாக அமைந்துவிடும். இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு போராட்டங்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் குரல் கொடுத்த முஸ்லிம் சகோதரர்களை என்றுமே மறக்க முடியாது என்றார் அவர். (35)

# "சன சமூக நிலையங்கள் கிராமத்தின் வழிகாட்டிகள்"

(சாவகச்சேரி)

''கிராமங்களிடையேவாழும் மக்களின் நாகரீகம், மதப் பற்று, கலை கலாச்சாரப் பண்பாடுகள் போன்றவைகளுடன், இன்றைய அரசியல், பொருளாதார, விஞ்ஞான பொது அறிவு வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு சன சமூக நிலையங்கள் வழிகாட்டிகளாக அமைய வேண்டும். இந்த அடிப்படை உண்மையை நமது சன சமூக நிலை நிர்வாகிகள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு தரமான நூல் நிலையத்தையும், கலை மன்றத்தையும் உருவாக்க இன்றே முன்வர வேண்டும்''

மேற்கண்டவாறு மட்டுவில் சோமாஸ்கந்தா சன சமூக நிலையத் தலைவர் திரு. ந. குணவீரசிங்கம், நிலையத்தின் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார். மேலும் அவர் கூறியதாவது.

ஒவ்வொரு கிராமத்தினதும் சன சமூக நிலையங்களே அக் கிராம மக்களின் வழி காட்டிகளாக அமைய வேண்டும். கிராம அபிவிருத்திகளில் முன்னோடிகளாக நின்று உழைக்க வேண்டும். அதே வேளையில் கிராம மக்களும் அதற்குப் பக்க பலமாக தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

இதையடுத்து இப்பகுதி கிராம சேவை அலுவலர் திரு. பொ. திருநாவுக்கரசு, திரு. எஸ். எம். அருளம்பலம், திரு. கா. வேதநாயகம், திரு. சி. சந்தசாமி ஆகியோரும் பேசினர். (35)

# மந்திகையில் மின் கோளாறு

(பருத்தித்துறை)

மந்திகைப் பகுதியின் மின் விநியோகச் சீர்கேட்டால் இப்பகுதியின் ஒரு பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களையும், சிரமங்களையும் அனுபவித்து வருவதாகப் புகார் செய்துள்ளனர்.

இப்பகுதிக்கான மின் விநியோகத்தில் அடிக்கடி கோளாறு ஏற்படுவதாகத் தெரிவித்த இப்பகுதி மக்கள் இதுபற்றி இலங்கை மின்சார சபை (நெல்லியடி) அலுவலகத்திற்குப் புகார் செய்தும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றும் கவலை தெரிவிக்கின்றார். (25)

# கொழும்பில் மீண்டும் நாடக விழா

(கொழும்பு)

கொழும்பில் நீண்ட இடைவெளிக்கு பின்னர் கொழும்பு தமிழ் நாடகப் பேரவையின் ஏற்பாட்டில் ஐந்து குறு நாடகங்களைக் கொண்ட 'விவித நாடக விழா' மார்ச் மாதம் 23 ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி நாடக விழாவில் என்னைச் சொல்லி குற்றமில்லை' கனவுகள் நிரந்தரம், வெள்ளித் தட்டு பூமாலை, காலனை வென்ற காரிகை, சில நேரங்களில் சில பைத்தியங்கள் ஆகிய நாடகங்கள் விழாவில் இடம் பெற உள்ளன. (27)

# யாழ். இன்டர் சிற்றி ரயில்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான இன்ரர் சிற்றி ரயில் இந்த மாதத்திற்குள் ஓட ஆரம்பிக்கும் எனப் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கைதடி விக்னேஸ்வரா இல்லப் போட்டிகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

''வாழ்க்கையில் சுகதேகியாக இருப்பதற்கு விளையாட்டு மிகவும் அவசியம். அதனாலேயே இன்று ஒரு பாடமாகக் கூட பாடசாலையில் படிப்பிக்கப்படுகின்றது'' என்று கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு யாழ் கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா குறிப்பிட்டார்.

அதிபர் திரு. தி, ஆர். தேவபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு தியாகராசா தொடர்ந்து பேசுகையில் தற்பொழுது பெண்கள்மட்டும்தான் போட்டிகளில் பங்குபற்றுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதிகமாக ஆண்களும் கட்டாயம் பங்கு பற்ற வேண்டுமென குறிப்பிட்டார்.

போட்டி முடிவில் விபுலானந்த இல்லம் 335 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. நாவலர் இல்லம் 330 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இராமநாத இல்லம் 269 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (42)

# நிபந்தனையற்ற பேச்சுக்கு நேர்மையுடன் சென்றோம்

(சாவகச்சேரி)

''இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இருந்த இலங்கை அரசு அதே கொள்கையும், அதே உறுதிப்பாடும் கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவும், நிபந்தனை இல்லாப் பேச்சுவார்த்தை நடத்தவும் வலிந்து முன்வந்தது. இதற்கு எதுவித அச்சமும் இன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் சம்மதித்தது என்றால் அது ஒரு அரசியல் சம்பிரதாயம் மட்டும் அல்ல விடுதலைப் புலிகளுக்குத் தமது நேர்மையிலும், வீரத்திலும் உள்ள அசையாத நம்பிக்கையுமாகும்.'

மேற்கண்டவாறு சாவகச்சேரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிஅரசியற்பொறுப்பாளர் திரு. எஸ். பி. கே. பாப்பா கூறினார். சாவகச்சேரி நகராண்மைக் கழக ஊழியர்களை அவர் அண்மையில் சந்தித்தபோதே இப்படிக் கூறினார். சாவகச்சேரிப் பொறுப்பாளர் திரு. கந்தனும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இந்தியாவினால் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுத்தர முடியாது. எமது சுயநிர்ணய உரிமையை நாமே தான் அரசியல் ரீதியாகவோ அல்லது போராட்ட ரீதியாகவோ வென்றெடுக்க வேண்டும். இந்திய இராணுவம் இலங்கையை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று நாம் விரும்பினோம். இலங்கை அரசாங்கமும் இதையே விரும்பியது. அரசியல் சம்பிரதாயத்திற்கிணங்க, அரசு எதுவித நிபந்தனையுமின்றி பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமானது. பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதேவேளையில் இந்திய ராணுவத்தின் நிழலில் நின்று கொண்டு எம் இனிய தமிழினத்திற்கு சொல்லொணாத் துயரைக் கொடுத்த சிலரும் இருக்கின்றனர். எம்மைப்பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டனர். ஆனால் எமது இயக்கமோ மக்களோடு மக்களாக இணைந்து கிராமங்கள் தோறும் அப்பாவித் தமிழ் மக்களுடனேயே வாழ்ந்து கொண்டிருந்தது.

தமிழர் ஒரு தமிழ்த் தேசிய இனமாகத் தலை நிமிர்ந்து வாழ்வதை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்ற மாபெரும் இலட்சியத்துடன் எமது ஒப்பற்ற தலைவன் உயர்ந்த நோக்குடன் மேற்கொண்ட எமது இயக்கம் எதுவித தடையுமின்றி வளர்கிறது. (35)

# மடத்தடியில்......

ஒருநாள் இரவு வன்னியூரனுக்குத் தூக்கம் வரவில்லை. கதைப் புத்தகங்களைப் புரட்டினார். ஆனால் எதுவும் சுவைப்படவில்லை. அருகே ஒரு திருக்குறள் இருந்தது. அதைப் பலதடவை புரட்டிப் பார்த்தார். இரண்டு இடங்களில் 'புலி' பற்றி வள்ளுவன் சொல்லி இருப்பது தெரியவந்தது.

''பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை

வெரூஉம் புலி தாக்குறின்''

என்பது ஒரு குறள்.

எல்லா விலங்குகளிலும் யானை பெரிய உடம்பினை உடையது. அதுவேயன்றிக் கூரிய தந்தங்களையும் உடையது. என்றாலும் அப்படிப்பட்ட யானையானது ஊக்கம் கண்ட புலி எதிர்ப்பட்டால் அதற்கு அஞ்சும் என்பது இதன் கருத்து.

இக்குறளிற்கு அரும்பத விளக்கம் அளிக்க வந்த திருக்குறளார் முனுசாமி அவர்கள் பின்வருமாறு விளக்கினார்: ''எதிரிகள் படைமிகுதி பெற்றிருப்பினும் ஊக்கம் மிக்க சிறு குழுவினரிடம் தோற்பர்''!

வள்ளுவன் புலி பற்றிச் சொன்ன கூற்றுக்கள் பல நூற்றாண்டுகட்குப் பின்பும் பொருத்தமாக இருக்கின்றது அல்லவா?

சபாஸ்......வள்ளுவன்.

ஊக்கம் இருந்தால் 273ஆவது குறளையும் தட்டிப்பாருங்கள். 'புலி' பற்றி அங்கும் குறிப்பு உண்டு!

- வன்னியூரன்

# மருந்து தெளிகருவி புலோலிக்கும் வேண்டும்

(பருத்தித்துறை)

புலோலி கமநலச் சேவை நிலையத்திற்கு ''பழமரங்களுக்குமருந்து தெளிக்கும் கருவி'' ஒன்று வழங்கப்பட வேண்டுமென புலோலி கமநலச்சேவைநிலையப்பகுதிக்குட்பட்ட விவசாயிகள், யாழ். மாவட்டகமநலச்சேவைஉதவி ஆணையாளர் திரு.ஏ. சிவசாமியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலோலி கமநலச் சேவை நிலையப் பகுதியில் பழமரங்கள் பல நோய்கள், பூச்சித் தாக்கங்களால் பாதிப்படைந்துள்ளதாகவும், இப்பழமரங்கள் நோய்கள், பூச்சித்தாக்கங்களிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கு இப்பழ மரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி மிக முக்கியமானதென்றும் அவ் விவசாயிகள்சுட்டிக்காட்டியுள்ளனர். சாவகச்சேரி, உடுவில், புத்தூர், வேலணை, நல்லூர் கமநலச்சேவை நிலையங்களுக்கு யாழ். மாவட்டகமநலச் சேவைகள் திணைக்களத்தால் பழமரங்களுக்கு மருந்து தெளிக்கும் கருவி வழங்கப்பட்டிருப்பது போன்று புலோலி கமநலச் சேவை நிலையத்திற்கும் வழங்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. (25)

**FRENCH LANGUAGE COURSE**

பிரெஞ்ச் மொழி வகுப்புகள்

(யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தில்)

SPOKEN FRENCH AND BEGINNERS

COMMENCES ON 10th MARCH SATURDAY AT 9. A. M.

INFORMATION AND REGISTRATION

**Alliance Francaise De Jaffna**
**130, 1st Cross Street,**
**Jaffna.**

(B. 165)

ஈழநாதம்
தமிழீழ மக்களின் இதயநாதமாக
ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்!

கட்டிடப் பொருட்கள் அனைத்திற்கும்
யாழ்நகரில் முன்னணியில்
திகழும் ஒரேயொரு ஸ்தாபனம்

**வைத்தியலிங்கம் மரக்காலை**
241, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B. 175)

ஈழநாதமே!
உனது பணி தொடர வாழ்த்தும்

**ஹோட்டல்**

# விடுதலை வீரர்கள் நினைவாக வெற்றிக்கிண்ணங்கள்

(சாவகச்சேரி)

தமிழீழ விடுதலைப் புலிகளால் தியாகிகளின் நினைவாக வழங்கப்பட்ட வெற்றிக்கேடயத்தை அருணாசலம் இல்லம் சுவீரித்துக்கொண்டது. இல்லத்தின் நீல வர்ணக்கொடி பறக்க, இல்லத்தலைவன் கடந்த கால போராட்டங்களில் உயிரிழந்த தியாகிகளுக்கு மௌன அஞ்சலி செலுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டார்.

கடந்தகால போராட்டங்களில் உயிரிழந்த வீரவேங்கைகள், மாணவர், பொதுமக்களின் நினைவாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக்கேடயங்களை அன்பளிப்புச் செய்து வருகின்றன. போட்டிகளில் முதல் இடத்தைப் பெறும் இல்லங்களுக்கு இந்த விடுதலைப் புலிகள் ஞாபக வெற்றிக் கேடயம் வழங்கப்படும். இந்த அடிப்படையில் (மட்டுவில்) சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டிகளில் புலிகள் வெற்றிக்கேடயத்தை அருணாசலம் இல்லம் பெற்றுக் கொண்டது. சந்தர், அருணாசலம், நடராஜா, காசிநாதர் ஆகிய முறையே மஞ்சள், நீலம், சிவப்பு, பச்சை ஆகிய இல்லங்களுக்கிடையில் சுறுசுறுப்பான போட்டிகள் நடைபெற்றன. ஈற்றில் கந்தர் 186புள்ளிகளும், அருணாசலம் 254 புள்ளிகளும், நடராஜா 244 புள்ளிகளும், காசிநாதர் 165 புள்ளிகளும் பெற்றன. அருணாசலம் இல்லம் சம்பியனாகியது. புலிகளின் கேடயத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு.எஸ்.வி. மகேஸ்வரவேல் வீரர்களுக்கான பரிசில்களை வழங்கினார். தமிழீழவிடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. என். ரஞ்சன் பாராட்டுரை நிகழ்த்தினார். (35)

# வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகம் இரு அதிகாரிகள் நியமனம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு இரண்டு புதிய கல்வி அதிகாரிகள் கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ். கல்வித் திணைக்கள விஞ்ஞானக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். செல்லத்துரை, உடுத்துறை கொத்தணி அதிபராக விருந்து பதவி உயர்வு பெற்ற திரு. எஸ். இராஜலிங்கம் ஆகிய இருவருமே வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்தின் புதிய கல்வி அதிகாரிகளாகப் பொறுப்பேற்றுக் கொண்டவர்களாவர். தற்போது வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகத்தில் கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருடன் மூன்று கல்விபபணிப்பாளர்களும் பணியாற்றி வருகின்றனர். (25)

ஈழநாதமே!
உன் பணி தொடர சிறக்க
எமது நல்வாழ்த்துக்கள்

**பரஸ்கோ**
**எஞ்ஜினியரிங் வேக்ஸ்**

கிரிக்கெட்

# சென்ஜோன்ஸ் - பற்றிக்ஸ் போட்டியில் எவரும் வெற்றியில்லை

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். சென். பற்றிக்ஸ்கல்லூரிக்குமிடையில்நடைபெற்றகிரிக்கெற் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெறும் வாய்ப்பை நளுவ விட்டது. இதன் காரணமாக இப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி 115ஓட்டங்களைப் பெற்றது. கே. பிரசாந்தன் சிறப்பாகவும் வேகமாகவும் துடுப்பெடுத்தாடி 52ஓட்டங்களைப் பெற்றார். அன்ரனிப்பிள்ளை 4 விக்கெட்டுகளையும் ஏ ஐ. ஆர். இன்பசோதி, அன்ரனிக் குறாப்தலா 2 விக்கற்றுக்களை கைப்பற்றினார்கள்.

சென்.பற்றிக்ஸ் முதல் இன்னிங்சில் சகல விக்கற்றுக்களையும்இழந்து139 ஓட்டங்களைப் பெற்றது. எஸ். விஜேந்திரா 26 ஓட்டங்களையும்கே. ஆர். வன்னியசிங்கி 28 ஓட்டங்களையும் ரி. யூவியன் 19 ஓட்டங்களையும் ஜி. வில்சன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பி முரளி 4விக்கட்டுக்களைக்கைப்பற்றினார் பி. பிரசாந்தன் 4 விக்கற்றுக்களைக்கைப்பற்றினார். சென் ஜோன்ஸ் கல்லூரி தனது 2 வது இனிங்சில் 7 விக்கற்றுக்களை இழந்து 179 ஓட்டங்களை மிகவும் வேகமாக சேகரித்துள்ளது. இதில் ஜெயகாந்தன் 21, சுரேஸ்குமார் 38, முரளி 43, சதீசன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

எம். என். ஜி. அன்ரனிப்பிள்ளை 2 விக்கற்றுக்களையும் எஸ். அன்ரனிகுயின் 3 விக்கற்றுக்களையும் கைப்பற்றினர்.

சென்பற்றிக்ஸ் தனது2-வது இன்னிங்சில் 82 ஓட்டங்களை 9 விக்கற் நஷ்டத்திற்கு பெற்றுள்ளது.

ஜே.பி. பாஸ்கரசந்திரன் 21 ஓட்டங்களையும் ஜி. வில்டன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். முரளி மிகவும் திறம்பட பந்து வீசி 5 விக்கற்றுக்களையும், பிரசாந்தன் 3 விக்கற்றுக்களையும் கைப்பற்றினர். மத்தியஸ்தர்களாக ஜே. சத்தியநாதன் ம. வேதாபரணம் ஆகியோர் கடமையாற்றினார்கள். (42)

ஈழநாதம் தமிழீழ மக்களின் இதயநாதமாக ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்!

இறக்குமதி செய்யப்பட்ட

லோங்ஸ், சேட், சேட்டிங், சூட்டிங்

மங்கள வைபவங்களுக்கேற்ற கூறைச் சேலைகள்

காஞ்சிபுரம், பட்டு வேட்டி சால்வைகளுக்கும்

புகழ்பெற்ற ஸ்தாபனம்

**லிங்கம் சில்க் ஹவுஸ்**

19, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23684

கிளை: 21 C, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.

யாழ்நகரில் முன்னணியில்
திகழும் ஒரேயொரு ஸ்தாபனம்

## வைத்தியலிங்கம் மரக்காலை

241, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(B. 175)

ஈழநாதமே!
உனது பணி தொடர வாழ்த்தும்

## ஹோட்டல் ஞானம்ஸ்

↕

## ஞானம்ஸ் ஸ்ருடியோ

299, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22082,

301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23067.

(B180)

## தாசன் ஸ்ருடியோ

உட்புற வெளிப்புற படப்பிடிப்பாளர்
வீடியோ படப்பிடிப்பாளர்

கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பளை.
(B-176)

விஞ்ஞானக் கல்வி அதிகாரி யாகக் கடமையாற்றிய திரு. எஸ். செல்லத்துரை, உடுத் துறை கொத்தணி அதிபராக விருந்து பதவி உயர்வு பெற்ற

தில் கோட்டக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருடன் மூன்று கல்விபபணிப்பாளர்க ளும் பணியாற்றி வருகின்ற னர். (25)

ஈழநாதமே!
உன் பணி தொடர சிறக்க
எமது நல்வாழ்த்துக்கள்

## பரஸ்கோ எஞ்ஜினியரிங் வேக்ஸ்

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(B 184)

நவநாகரீக
புடவை வகைகளின்
கலைக் களஞ்சியம்

உங்கள் மனம் விரும்பும்
வண்ணத் தேர்வுகளை
எண்ணம்போல் தெரிவுசெய்ய

## பரிஸ் மாட்ஸ்

155, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(B/182)

## துஷந்தாஸ்

வெல்டிங் வேக்ஸ் சொப்

கேற்கிறில், மின்ஒட்டு ஆகிய வேலைகள்
சிறந்த முறையில் செய்பவர்கள்

பலாலி வீதி, கோண்டாவில்.
(B-177

காஞ்சிபுரம், பட்டு வேட்டி சால்வைகளுக்கும்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

## லிங்கம் சில்க் ஹவுஸ்

19, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23684
கிளை: 21 C, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.

## Lingam's Silk House

*18, Model Market, Power House Road,*
*Branch: 21C, Model Market, (Upstairs)*
JAFFNA
(B.181)

வாழ்க ஈழநாதம்!

கூறைச் சேலைகள், காஞ்சிபுரம் பியூட்டி குயின்
புதிய ஜப்பான் சாறி வகைகள்,
பிளவுஸ் துணிகள், பட்டு வேட்டிகள்,
சிறுவர்களுக்கேற்ற சேட்டிங், சூட்டிங் வகைகள்
யாவற்றையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில்
பெற்றுக் கொள்ள
சிறந்த ஸ்தாபனம்.

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

## SOTHI TEXTILES

மின்சாரநிலைய வீதி,
14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(B.178)

## சிந்தனைக்கு

இன்பத்தின் இரகசியம் சுதந்திரம்
சுதந்திரத்தின் இரகசியம் துணிவு

- தூசிடிடிஸ்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 07 - 03 - 90

## மாநகரசபையின் மின்சார விநியோகம்

மின்சார சபைக்கு இரண்டு கோடியே எண்பது லட்சம் ரூபாய் யாழ்ப்பாண மாநகரசபை பாக்கியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. இத்தொகையை மாநகர சபை மின்சார சபைக்குச் செலுத்தினாலே மாநகரசபைப் பகுதியில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய உபமின்நிலைய அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கும்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் இவ் விபரத்தைத் தெரிவித்திருக்கிறார்.

மின்சார விற்பனையில் யாழ். மாநகரசபைக்கு நஷ்டம் ஏற்பட்டதற்குக் கடந்த காலங்களில் சட்ட விரோதமாக கொழுவி இழுத்து மின்சாரம் பெற்றவர்கள் முக்கிய காரணம்.

இவ்விதமான சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவர்களிடமிருந்து அதற்கேற்ான பணத்தை மாநகர சபை துணிந்து அறவிட்டிருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வருடங்களில் நிகழ்ந்த சம்பவங்களினால் கைத்தொழில்கள் பல செயலிழந்திருந்தன. விவசாயிகளும் பாதிக்கப் பட்டிருந்தனர்.

இப்பொழுது நிலைமை சீரடைந்து வருவதால் மீண்டும் கைத்தொழில்கள் இயங்கவும் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் மக்கள் முன்வருவர்.

விவசாயிகளும் தோட்டக்காரர்களும் மீண்டும் பயிர்ச்செய்கையை உற்சாகத்துடன் தொடங்க முன்வருவர்.

இந்நிலையில் யாழ். நகருக்கு மின்சாரத் தேவை அதிகரிக்கும். இப்போதுள்ள உபமின்நிலையங்களிலிருந்து அதிக மின்சாரத்தைப் பெறமுயன்றால் உபமின் நிலையங்களே பழுதடைந்துவிடும்.

இப்பொழுது சில பகுதிகளுக்கு மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது. சில வீதிகள் இன்னமும் இருளில் கிடக்கின்றன.

மின்சார பாவனையாளர்களும் இதைச் சிக்கன

# "கலைச் செல்வங்கள் கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்; பாரதியின் குரல் இன்னும் செவிகளில்விழ வில்லையே"

### யாழ்ப்பாணப் புவியியலாளன் வெளியீடு - சில சிந்தனைகள்

இலங்கையில் பாலர்வகுப்பு முதல் பல்கலைக் கழகம்வரை தாய் மொழியே போதனா மொழியெனச் சட்டவாக்கம் செய்து மூன்று தசாப்தகாலம் சென்றும், இன்றும் அறிவியல் சமூக அறிவியல் நூல்கள், சஞ்சிகைகள் தமிழ்மொழியிற் போதியளவு வெளி வருவதில்லை என்பது கசப்பான உண்மையாகும். சிங்கள மக்களின் தேசியப் பற்றும், மொழிப்பற்றும் வாய்ப்பேய்ச் சுக்களாலன்றி செயலுருவில் எழுச்சி பெறுவதால் சிங்கள மொழியில் மேற்படி அறிவியல், சமூக அறிவியல் நூல்கள், சஞ்சிகைகள் கணிசமான அளவில் வெளிவருகின்றன.

தமிழில் எமது சாதனை என்ன? தமிழ்மொழி இவற்றையெல்லாம் தாங்குமா என இன்றும்: அதாவது பல்கலைக்கழகப் பயிற்று மொழியாக தமிழ்மொழி ஆக்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் முடிந்தபின்னரும் நாம் ஐயுறுகின்றோம்: தமிழ் வீட்டு மொழிதான் என்ற பொருள்பட அறிஞர் அவைகளில் எந்தக் கூச்சமுமின்றி விவாதிக்கவும் செய்கின்றோம். இப்படிப் பட்டவர்களைப் பார்த்துத்தான் "நெஞ்சு பொறுக்குதில்லையேஎன்றான் பாரதி. அவன் தமிழரிடம் மெத்தப் படித்த தமிழ் அறிஞர்களிடம் கெஞ்சுகின்றான்: சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று, மேற்கே மெத்த வளரும் புத்தம்புதுக் கலைகளை தமிழிற் கொண்டுவந்து சேருங்கள் எனப் பாரதி குரல் கொடுத்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும் இன்று வரை அவன் குரல் தமிழ் அறிஞரது செவிப்பறைகளில் உரத்து ஒலிக்கவில்லை. தமிழர்களில் அறிஞர்களும், விஞ்ஞானிகளும் அனேகம், ஆனார் அவர்கள் தமிழிற்கு ஆற்றிய தொண்டென்ன? தங்களுக்குப் பரிச்சயமான புத்தம் புதுக் கலைகளைத் தமிழில் எத்தனை பேர் கெண்டுவந்தார்கன். பல்கலைக் கழக மட்டத்திலே மிகச் சிலரே இவற்றினைப்பற்றி அக்கறையுடன் சிந்திக்கின்றனர். இவ்வாறு சிந்திப்பவர்களே தமிழில் அறிவியல், சமூக அறிவியல் நூல்கள், சஞ்சிகைகளை வெளியிடுகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீடம் இவ்வாறான வெளியீடுகளில் அக்கறை காட்டுகின்றது. இவ்வகையாலே புவியியற்றுறையினரின் பங்களிப்பே' யாழ்ப்பாணப் புவியியலாளன்' எனும் வருடாந்த சஞ்சிகையின் வெளியீடாகும்.

'யாழ்ப்பாணப் புவியியலாளன்' இல. 5இன் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை (7.3.90) மாலை பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறுகின்றது. கடந்த 5 ஆண்டுகளாக வெளிவரும் இச் சஞ்சிகையின் சில இதழ்கள் சிறப்பிதழ்களாகவும் சில, தமிழில் உயர்கல்வி கற்கும் மாணவர்கட்கும் பயன்படும் கட்டுரைகளைத் தாங்கியும் வெளிவருகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாணப் புவியியலாளன் இல 4 பிரதேச அபிவிருத்தி இதழாக மலர்ந்தது. தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குரிய பல ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த இந்த இதழ் எம் பிரதேச அபிவிருத்திபால் புவியியற்றுணையினர் கொண்ட ஆழ்ந்த அக்கறைக்கு எடுத்துக்காட்டாக அமைந்ததெனலாம், 'யாழ்ப்பாணப் புவியியலாளன்' இல. 5 பெரிய அளவிலே, தமிழில் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு அதிகளவு பயன் தரும் வகையிலும் அறிவைத் தேடும் சாதாரண பொது மக்களுக்கு பயன்படும்வகையிலும் பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது, இக் கட்டுரைகளைப் பேராசிரியர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் இணைந்து எழுதியுள்ளனர். அனைவரும் பெற்று பாதுகாத்து வைத்துப் படித்துப் பயன் பெறத்தக்க பல ஆக்கங்கள் இதில் உள்ளன: இது தமிழன்னைக்குப் புவியியற்றுறையினர் அணிவிக்கும் ஓர் அணி என்பதில் ஐயமில்லை. புவியியற்றுறைத் தலைவரும், விரிவுரையாளர்களும், மாணவர்களும் ஒன்றிணைந்து சேவையாற்றி ஊக்கமுடன் தமிழ் வளரச்சிப் பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு ஆதரவளிக்க வேண்டும். பொதுமக்கள் வெளியீட்டு விழாக்களுக்குச் செல்லுதல், சஞ்சிகையை விலை கொடுத்து வாங்குதல் மூலம் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கலாம்.

- சிவபாரதி

## மக்கள் மடல்

### கர்ப்பினித்தாய்மாரின் கஷ்டம்

ஆசிரியர்
ஈழநாதம்

யாழ். போதனா வைத்தியசாலையில் கர்ப்பினி தாய்மார்களை பார்வையிடும் கிளினிக்கில் புதிய கர்ப்பிணிகளை பார்வையிடுவதற்கு 10 முதல் 15 வரையிலான நம்பர் வழங்கப்படுகிறது வழக்கம் ஆயினும் அங்கு கடமைபுரியும் பெண் ஊழியர் ஒருவர் 9 அல்லது 7 வரை வழங்கி விட்டு நம்பர் முடிந்து விட்டது போங்கள் என்று விரட்டுகிறார், கேட்டால் கண்டபடி ஏசிக் கலைக்கிறார். பல தடவைகள் அதிகாலை சிரமப்பட்டுச் செல்லும் தாய்மார்களுக்கு ஏமாற்றமே கிடைக்கிறது. மிகுதி நம்பர் தங்களுக்கு விரும்பியவர்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு நம்பர் கொக்கப்படுகிறது ஒரு சிலர் செய்யும் தவறால் புனிதமான ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் களங்கம் வரலாமா? உண்மையான கடமை உணர்வுள்ள ஊழியர்களுக்கு அவமானம் வரலாமா? கர்ப்பிணி தாய்

சாவகச்சேரி

## வடநகர் கொத்தணி பாடசாலைகள் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடநகர் கொத்தணிப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள், வடநகர் கொத்தணி அதிபர் திரு. கா. சி. குகதாசன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் வருமாறு:

13 வயதுக்குட்பட்டோர் ஆண் பெண் சாவகச்சேரி இந்

பெண் 1 ஆம் இடம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், 2ஆம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 3ஆம் இடம் சரசாலை ஸ்ரீ கணேஷா வித்தியாலயம்.

19 வயதுக்கு உட்பட்ட ஆண் 1ஆம் இடம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம். 2 ஆம் இடம் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம். 19 வயதிற்குட்பட்டோர் பெண் 1ஆம் இடம் மீசாலை விக்னேஸ்

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றம் "நாவலரும் தமிழும்" எனும் பொருளில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு (10-03-90) கருத்தரங்கொன்றை நடத்துகின்றது.

பண்டிதை பொன்பாக்கியம் உட்பட பலர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்கின்றனர்.

சட்டத்தரணி கோ.தேவராசா தலைமையில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. செயலாளர் செல்வன் அழபகீதரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (12)

## "பருத்தித்துறை மருத்துவமனைப் பகுதிக்கு மின்சாரம் வேண்டும்"

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளுக்கு மின் வெளிச்சம் ஏற்படுத்தித் தருமாறு, வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளரைக் கேட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச

தியில் முகாம் அமைத்திருந்த இந்திய இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். இம் முகாம் அமைக்கப்பட்டிருந்த பகுதிகளின் தெரு மின்விளக்குகள் இந்திய இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் வைத்தியசாலையை அண்மித்த பகுதிகள் தற்போது இரவு வேளைகளில் மின் வெளிச்சமின்றியே

யாழ்ப்பாணத்தில் கடந்த ... நிகழ்ந்த சம்பவங்களினால் கைத்தொழில்கள் பல செயலிழந்திருந்தன. விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இப்பொழுது நிலைமை சீரடைந்து வருவதால் மீண்டும் கைத்தொழில்கள் இயங்கவும் புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்கவும் மக்கள் முன்வருவர்.

விவசாயிகளும் தோட்டக்காரர்களும் மீண்டும் பயிர்ச்செய்கையை உற்சாகத்துடன் தொடங்க முன்வருவர்.

இந்நிலையில் யாழ். நகருக்கு மின்சாரத் தேவை அதிகரிக்கும். இப்போதுள்ள உபமின்நிலையங்களிலிருந்து அதிக மின்சாரத்தைப் பெறமுயன்றால் உபமின் நிலையங்களே பழுதடைந்துவிடும்.

இப்பொழுது சில பகுதிகளுக்கு மின்சாரம் அடிக்கடி தடைப்படுகின்றது. சில வீதிகள் இன்னமும் இருளில் கிடக்கின்றன.

மின்சார பாவனையாளர்களும் இதைச் சிக்கனமாகப் பாவித்து ஒத்துழைத்தால்தான் நகரில் மின் தட்டுப்பாடு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்,

மாநகரசபை மின்சாரப் பகுதி ஊழியர்களும் தங்கள் கடமையை நேர்மையாகவும் உண்மையாகவும் நிறைவேற்றுவதும் மின்சாரம் வீணாகாமல் தடுக்க முடியும்.

அரசாங்க இலாகாக்களில் கடமையாற்றும் ஊழியர்களும் மின்பாவனையில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவை தவிர மாநகரசபையில் மின்சாரக்கட்டணம் அறவிடும் பகுதி ஊழியர்கள் சுறுசுறுப்பாகச்செயல்பட்டு, முதல்மாதம் அறவிடவேண்டிய கட்டணத்துக்குரிய சிட்டைகளை மாதம் முடிந்ததுமே பாவனையாளர்களுக்குக் கிடைக்கச் செய்தால் உடனுக்குடன் அவர்கள் கட்டணத்தைச் செலுத்த முடியும். இதனால் பாக்கித் தொகை அதிகமாகக் கட்டணம் செலுத்துவதற்குக் கஷ்டம் ஏற்படாது.

இது ஒருபுறமிருக்க மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய பாக்கிப் பணத்தைச் செலுத்துவதற்கு அரசாங்கத்திடமிருந்து சுலபத் தவணையில் செலுத்தக்கூடிய கடனைப் பெறுவதற்கு மாநகரசபை முயற்சி செய்ய வேண்டும்.

மூன்று நான்கு மாதங்கள் மின்சாரமில்லாமல் இருளில் கிடந்து யாழ்ப்பாண மக்கள் அனுபவித்த துயரம் போதும். இனியும் மின்சாரம் தடையின்றிக் கிடைக்க வேண்டியது அவசியம்.

# கடற்பயிற்சிப் போட்டிள்

(கரவெட்டி)

வடமாராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (9-3-90) கலை 8-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகளுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு, பொ. வீரபத்திரன் அவர்கள் தலைமை வகிப்பார்.

இப்போட்டியில் பங்கு பற்றும் பாடசாலைகள், பங்கு பற்றும் மாணவர்களின்பெயர் பிறந்த திகதி யடங்கிய பட்டியலைவடமராட்சிகோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி மேற்படி கோட்டக்கல்வி அதிகாரி பொ. வீரபத்திரன் அவர்கள் கேட்டுள்ளார்.

சளை பார்வையிடுவதற்கு 10 முதல் 15 வரையிலான நம்பர் வழங்கப்படுகிறது வழக்கம் ஆயினும் அங்கு கடமைபுரியும் பெண் ஊழியர் ஒருவர் 9 அல்லது 7 வரை வழங்கி விட்டு நம்பர் முடிந்து விட்டது போங்கள் என்று விரட்டுகிறார், கேட்டால் கண்டபடி ஏசிக் கலைக்கிறார். பல தடவைகள் அதிகாலை சிரமப்பட்டுச் செல்லும் தாய்மார்களுக்கு ஏமாற்றமே கிடைக்கிறது. மிகுதி நம்பர் தங்களுக்கு விரும்பியவர்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு நம்பர் கொக்கப்படுகிறது ஒருசிலர் செய்யும் தவறால் புனிதமான ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் களங்கம் வரலாமா? உண்மையான கடமை உணர்வுள்ள ஊழியர்களுக்கு அவமானம் வரலாமா? கர்ப்பிணி தாய்மார்களின் அவலம் நீங்குமா? சம்பந்தப்பட்ட நிர்வாகம் கவனிக்குமா?

-இந்திரா
பாதிக்கப்பட்ட கர்ப்பினி
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரி

# வடநகர் கொத்தணி பாடசாலைகள் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடநகர் கொத்தணிப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள், வடநகர் கொத்தணி அதிபர் திரு. கா. சி. குகதாசன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம் வருமாறு :

13 வயதுக்குட்பட்டோர் ஆண் பெண் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 17 வயதுக்குட்பட்டோர் ஆண் 1 ஆம் இடம் சரசாலை ஸ்ரீ கணேஷா வித்தியாலயம், 2 ஆம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 17 வயதுக்குட்பட்ட பெண் 1 ஆம் இடம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், 2ஆம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 3ஆம் இடம் சரசாலை ஸ்ரீ கணேஷா வித்தியாலயம்.

19 வயதுக்கு உட்பட்ட ஆண் 1ஆம் இடம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம். 2 ஆம் இடம் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம். 19 வயதிற்குட்பட்டோர் பெண் 1ஆம் இடம் மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் 2ஆம் இடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. (35

பியலாளன்' இல. 5 பெரிய அளவிலே, தமிழில் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு அதிகளவு பயன் தரும் செயலாளர் செல்வன் அழபதி தரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (12)

# "பருத்தித்துறை மருத்துவமனைப் பகுதிக்கு மின்சாரம் வேண்டும்"

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளுக்கு மின் வெளிச்சம் ஏற்படுத்தித் தருமாறு, வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளரைக் கேட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. வி. த்வலும் மயிலுவிற்கு வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பகுதியில் முகாம் அமைத்திருந்த இந்திய இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். இம் முகாம் அமைக்கப்பட்டிருந்த பகுதிகளின் தெரு மின்விளக்குகள் இந்திய இராணுவத்தினரால் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் வைத்தியசாலையை அண்மித்த பகுதிகள் தற்போது இரவு வேளைகளில் மின் வெளிச்சமின்றியே காணப்படுகின்றது. இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இப்பிரச்சினையைப் போக்குமுகமாக வைத்தியசாலையை அண்மித்த பகுதிகளுக்கு வீதி மின் விளக்குகளைப் பொருத்தித் தரவேண்டும். (25)

# சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நோயாளிகள் அவதி

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகள் இன்மையால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அத்தோடு மருந்து வகைகள், பன்டேச் துணிகள் என்பவற்றிற்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் நோயாளர் பெரும் அவஸ்தையும் கஷ்டமும் அடைகின்றனர்.

நோய்க்கு, சிகிச்சையும், மருந்தும் பெறப்போகும் ஏழை நோயாளர் நீண்ட நேரம் கியூவில் இருக்க வேண்டும்: பசியும் களையும் தலையைச் சுற்ற டாக்டர் பரிசோதித்து அங்கு இருக்கும் மருந்துகளை எழுதிக்கொடுத்து விட்டு இல்லாத மருந்துகளை தனியார் மருந்துக் கடையில் எடுக்கும்படி துண்டு கொடுக்கின்றனர்

நான்கு பேர் பணி புரிந்த இடத்தில் இன்று இரு உதவி வைத்தியர்களே உள்ளனர்.

கடந்த வார இறுதியில் தொடர்ந்து மூன்று நாட்கள் ளாக ஒரு உதவிவைத்திய அதிகாரி மாத்திரமே இரவு பகலாக கடமையில் இருந்தார். லீவில் சென்ற மற்ற உதவி வைத்திய அதிகாரியின் இடத்திற்கு பதில் கடமைக்குரிய வைத்திய அதிகாரி அங்கு செல்லவில்லை.

சட்ட வைத்திய அதிகாரி பலமாதங்களாக கடமைக்கு வருவதில்லை.

தினம் சுமார் 250 வெளி நோயாளர் அங்கு சிகிச்சைக்கு வருகின்றனர். வாட்டில் ஆண்கள் பெண்கள் எல்லாமாக சராசரி முப்பது பேர் தங்குகின்றனர்.

பிரசவம், கிளினிக் என பல பிரிவுகள் உள்ள ஒரு நடுத்தர வைத்தியசாலை.

இங்கு மூன்று தொகுதி மக்கள் சிகிச்சைக்கு வருகின்றனர், காங்கேசன்துறைத் தொகுதி, மானிப்பாய்த் தொகுதி வட்டுக்கோட்டைத் தொகுதி என்பனவே அவையாகும்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் காரைநகர் வைத்தியசாலைக்கு அடுத்த பெரிய வைத்தியசாலையும், பெரும் பிரதேசத்திற்கும் பெருந்தொகையான மக்களுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலை இது.

பனடோல், பீக்கோ, வேர்மெச் இப்படி பல மிகமிக அத்தியாவசியமான மருந்துகட்கு அங்கு தட்டுப்பாடு. (12)

# சாவகச்சேரி கமநல சேவை விவசாயிகளுக்கு இலவச மண்வெட்டி!

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலையம், தனது எல்லைக் குட்பட்ட தென்மராட்சிப் பகுதி விவசாயிகளுக்கு இலவசமாக மண் வெட்டிகளை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

இம் மாதம் 8ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள்ள இந்த விவசாயிகளுக்கான இலவச மண்வெட்டி விநியோகத்தில் அவ்வப் பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும், கமநலச் சேவை திணைக்கள சிரேஷ்ட உதவிஆளணயாளரும், தென் மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு பு.சுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்வார்கள் என்று கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு க. சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (35)

# மனித உரிமைகளை மீறும்--------

நேற்றைய தொடர்ச்சி

இனங்களின் பல்லினத்தன்மையையும், சமாதான சகவாழ்வின் முக்கியத்துவத்தையும் உணர்வதற்கு இலங்கைக்கு இந்தியா உதவியுள்ளது. அலைகள் மோதும் எல்லையற்ற குடா நடுவில் இருந்தபோதிலும் அயல் நாடு என்பதை இலங்கையர்கள் உணரத்தலைப்பட்டுவிட்டனர். தனக்கு முந்தியவரைவிட இலங்கையில் மதிப்புக்குரியவரான இந்தியத் தூதுவர் எல். எல். மெல்ரோத்ரா இதை நாசூக்காக இலங்கைக்கு உணர்த்தியுள்ளார். ஸ்ரீ லங்காவில் இந்திய ராஜரீகத்தின் இன்ப நினைவுகளுனும் தோல்விகரகசப்பான மாத்திரைகளுடன் திரும்பும் இந்தியா, இந்தியாபற்றிய இலங்கையரின் பயத்தையும் சந்தேகத்தையும் தவிர்க்கும் வகையில்உணர்வுபூர்வமாக உறவுகளை இலங்கையுடன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். திறமையான கல்வி, சுகாதார சேவைகள், சத்துணவு, போன்றவற்றுக்காக மூன்றாம் உலக நாடுகளில் இலங்கைக்கு ஒரு பெயர் உண்டு. இலங்கையர்கள் பெருமையுள்ளவர்கள் என்பதையும் இந்தியா ஒருபோதும் மறக்கக் கூடாது. சிங்களர் என்ற சொல் சிங்கம் என்ற சொல்லின் அடிப்படையாகத் தோன்றியது.

நன்றி: இந்தியா ருடே.

முற்றும்

# அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்

(கரவெட்டி)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு இரண்டு புதிய கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட விஞ்ஞானக் கல்வி அதிகாரியுமான திரு. எஸ். செல்லத்துரை, உடுத்துறைக் கொத்தணி அதிபர் திரு. வை. இராசலிங்கம் என்பவர்களே மேற்படி நியமனம் பெற்ற அதிகாரிகளாவார்கள்.

திரு. எஸ். செல்லத்துரை கல்வி நிர்வாகத்திற்கும், திரு. வை. இராசலிங்கம் கல்வித் திட்டமிடலுக்கும் பொறுப்பாக இம் மாதம் முதலாம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளனர். (1?

ஈழநாதம்

## கர்ப்பிணிப் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)
குடும்பத் தகராறு காரண
மாக குடும்பப்பெண் ஒருவர்
தனக்குத்தானே தீமூட்டி தற்
கொலை செய்து கொண்டார்.
ஜெசீமா (வயது 19) என்ற
நான்குமாத கர்ப்பிணிப்
பெண்ணே தற்கொலை
செய்துகொண்டவராவார்.
இவர் யாழ். முஸ்லிம் வீதியைச்
சேர்ந்தவர் என்று தெரிவிக்
கப்பட்டது. (தி)

# மலையக மக்களுக்குச் சரியான தலைமை வழிகாட்டவில்லை,

—பேராசிரியர் பஸ்த்தியாம்பிள்ளை

(கொழும்பு)
மலையகத்தை சுவர்க்கபூமி
என நம்பி கனவுகளோடு
இங்கு வந்த தொழிலாளர்
கள் அடிமைகள் போல் நடத்
தப்பட்டனர் கிராமத்து சிங்
கள மக்களோடு எந்த வித
தொடர்புமின்றி தோட்டமே
அவர்கள் வாழ்க்கையாக
அமைந்தது. இங்கு வாழ்ந்த
தமிழ் மக்களோடும் ஒன்றி
னைய அவர்களை பிரிட்டிஸ்
ஏகாதிபத்திய வாதிகள் விட
வில்லை.

இவ்வாறு கொழும்பு பல்
கலைக்கழக வரலாற்றுத்துறை
பேராசிரியர் திரு. பஸ்த்தி
யாம்பிள்ளை பேசும் பொழுது
குறிப்பிட்டார்.

இனங்களுக்கிடையில் நீதிக்
கும் சமத்துவத்துக்குமான
இயக்கம் கடந்த சனிக்கிழமை
கொழும்பு சவ்ஸிபாய மண்ட
பத்தில் ''தேசிய தனித்துவம்
தொடர்பாக சமத்துவத்தை
அடைவதில் மலையக மக்கள்
எதிர் நோக்கும் பிரச்சினை
கள்'' என்ற தலைப்பில் கருத்
தரங்கை நடத்தியது.

மேற்படி கருத்தரங்கிற்கு
திரு. சார்ள்ஸ அபயசேகர
தலைமை வகித்தார். பேரா
தனை பல்கலைக் கழக
சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி சிவராசா கருத்த
ரங்கை தொடக்கி வைத்தார்

மேலும் திரு. பஸதியாம்
பிள்ளை பேசுகையில் பெருந்
தோட்டத்துறையில் பெரும்
அளவு பொருளாதாரம் உரு
வாகியதால் பெருந்தொகை
யான தொழிலாளர்கள் ஆசை
வார்த்தை காட்டி அழைத்து
வரப்பட்டார்கள் புதிய கனவு
களோடு வந்தவர்கள் அடி
மைகளைப் போல நடத்தப்
பட்டார்கள்.

இவர்களின் வருகைக்கு பின்
னர் தெயிலை செழித்து வள
ராலாயிற்று. பொருளாதாரம்
பெருகியது ஆனால் இவர்கள்
வாழ்வு துன்பம் சூழந்ததாக
இருந்தது. இவர்களின் வசிப்
பிடங்கள் மிகவும் மோசமாக
இருந்தது அன்றிலிருந்து
இன்றுவரை அதே வதிவிடங்
களில் தான் வாழ்கிறார்கள்.

இந்த பெருந்தோட்டத்
துறை உழைப்பை தவிர வேறு
வில்லை. இவர்களுக்காக
பெருந்தோட்டத்துறையில்
முதன் முதல் தொழிற்சங்க
அமைப்பை உருவாக்கியவர்
சோ. நடேசய்யர். இதன்பின்
னர் இந்த மக்களின் உரிமை
களுக்காக குரல் எழுப்பியவர்
கள் இடதுசாரிகளான லங்
கா சமசமாஜக்கட்சியினர்.

இந்த தோட்ட மக்களின்
பிரதிநிதிகளாக 1947 -- ஆம்
ஆண்டு ஏழுபேர் தெரிவு செய்
யப்பட்டனர். இந்தியர்கள்
போட்டியிடாத இடங்களில்
இவர்கள் இடதுசாரிகளை
ஆதரித்தனர். எதிர்காலத்
தில் இவர்களால் ஆபத்து
ஏற்படும் என நினைத்த சிங்
கள தலைமை 1948 - ஆம்
ஆண்டு இந்த மக்களின் வாக்
குரிமையை பறித்தது.

அன்று முதல் இன்று வரை
இந்த பெருந்தோட்டத்துறை
மக்கள் ஒதுக்கப்பட்ட இன
மாக உரிமை மறுக்கப்பட்ட
வர்களாகவே வாழ்ந்து வரு
கிறார்கள். ஏனைய பெரும்
பான்மைசமூகத்திற்கு கிடைக்
கும் வாய்ப்புகள் இவர்களுக்கு
வழங்கப்படுவதில்லை. இவர்
களுக்கு சரியான தலைமை
வழிகாட்டவில்லை.

மற்றும் கொழும்பு பல்கலை
கழக சிரேஷ்ட விரிவுரையா
ளர் திரு. எஸ். சந்திரசேகரன்
நிதிதிட்டமிடல் அமைச்சின்
பிரதிப்பணிப்பாளர் திரு. எம்.
வாமதேவன், பேராதனை
பல்கலைக்கழகபுவியியற்றுறை
விரிவுரையாளர் திரு. எம்.
எஸ். மூக்கையா, இலங்கை
மன்ற கல்லூரியை சேர்ந்த
திரு. ஆறுமுகம் ஆகியோர்
கருத்தரங்கில்கட்டுரை வாசித்
தார்கள், (27)

## சிவாந்தினிக்கு முதலிடம்

(விசேட நிருபர்)
பருத்தித்துறை மெதடிஸ்த
பெண்கள் உயர்தரக் கல்லூரி
மாணவி செல்வி சிவாந்தினி
நடராசா கொழும்பு தமிழ்ச்
சங்கம் நடாத்திய அகில
இலங்கை பேச்சுப் போட்டி
யில் மேற் பிரிவில் முதலாம்
இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கீரிமலை சிவநெறிக்
சழகம், புலோலி சவதானி
கதிரவேற்பிள்ளை சனசமூக
நிலையம், பருத்தித்துறை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்
கம் என்பன நடத்திய பேச்
சுப் போட்டிகளில் முதற் பரி
சுகளைத் தட்டிக் கொண்டும்
உள்ளார்.

இலங்கை மின்சாரசபை
முன்னாள் பிரதம லிகிதர்
திரு. ஆ. நடராசாவின் புதல்
வியான செல்வி சிவாந்தினி
''சின்னமணி குழுவினரின்''
''கம்பரும் கலைவாணியும்''
வில்லுப் பாட்டு நிகழ்ச்சியின்
பிரதம பாத்திரமாகவும்

## ஒழுங்கான விண்ணப்பங்களாயின் பாஸ்போர்ட் விநியோகம் துரிதமாகும்

(கொழும்பு)
பிரான்சிலிருந்து பாஸ்
போர்ட் வழங்கப்படுவதற்
கான புத்தகங்கள் தருவிக்கப்
படவுள்ளன. அண்மைக்காலத்
தில் பாஸ்போர்ட் கோரி குடி
வரவு குடியகல்வு இலாகா
வுக்கு விண்ணப்பங்கள் வந்து
குவிந்தவண்ணம் உள்ளன.
பிரான்சிலிருந்து 8 இலட்சம்
புத்தகங்கள் தருவிக்கப்பட
வுள்ளது.

பாஸ்போர்ட் கோரி விண்
ணப்பிப்பவர்களில் பெரும்
பாலோர் மத்தியகிழக்கு நாட்
டிற்கு வேலைவாய்ப்புத் தேடி
செல்வோராகவும் மாணவர்
பங்கள் குடிவரவு குடியகல்வு
இலாகாவுக்கு வந்து
சேருகின்றன. ஆனால் நாள்
ஒன்றுக்கு 1500 பாஸ்போர்ட்
டுகள் தான் விநியோகிக்கப்படு
கின்றன.

பாஸ்போர்ட்டிற்கு அனுப்
பப்படும் விண்ணப்பங்களில்
தரப்படும் தகவல்கள் சரியான
தாக இருப்பின் துரிதமாக
பாஸ்போர்ட் வழங்கல் நடை
பெறும்என்றும் ஆனால் பிழை
யான தகவல்கள் வழங்கு
வோரால் எப்போதுமே தலை
யிடியாகவுள்ளது எனவும் கட்
டுப்பாட்டாளர்இரத்நாயக்கா
தெரிவித்தார். பிறப்புச் சான்

# பனம் பழத்தின் பொருளாதார முக்கியத்துவம் உணரப்படவில்லை

—நடராசா

(யாழ்ப்பாணம்)
பெறக்கூடிய நன்மைகளைப்
பெறாமல், கவனிக்காது விடப்
பட்டிருக்கும் ஒரு பண்டம் உல
கத்தில் பனம் பழம் தான்.
மதுசாரத்தை விடப் பொரு
ளாதார வகையில் பயன்
பொருத்தமான அதிக பய
னைத் தரக்கூடியது தும்பும்,
பனம்பழமும் தான், இவ்வாறு
பனை அபிவிருத்திச் சபைத்
தலைவர் கே. நடராசா பனை
அபிவிருத்தி தொடர்பாக
யாழ்ப்பாணத்தில் நேற்று
நடந்த பத்திரிகையாளர் மகா
நாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறிய
தாவது:

தொடர்ந்தாற்போல் இங்கு
ஐந்து வருடங்கள் இலங்கை,
இந்திய இராணுவ நடவடிக்
கைகளால் வறுமைக் கோட்
டிற்குக் கீழ் வாழும் பனையும்,
பனையைச் சார்ந்த தொழி
லைச் செய்யும் மக்கள் பெரி
தும் பாதிப்புக்குள்ளானார்
கள். இம் மக்களுக்குப் புனர்
வாழ்வளிக்க ஐக்கிய நாடுகள்
நிறுவனம் பல கோடி ரூபாய்
களை ஒதுக்கியுள்ளது. பனை
சார்ந்த தொழில்களில் நேரடி
யாக ஈடுபட்டிருக்கும் 65, 000
குடும்பங்களும் சுய தேவைக்
காக இத் தொழிலில் ஈடுபட்
டிருக்கும் 25, 000 குடும்பங்
களும் புனர்வாழ்வு அடிப்
படையில் நன்மைகளைப்
பெறுவர். இத் தொழிலாள
ரின் தொழில் திறமையை
வளர்ப்பதற்குப் பயிற்சிகள்,
உதவிகள் வழங்குவதன்மூலம்
பனை உற்பத்திப் பொருள்
களின் தரம் உயர்த்தப்படும்
என்றார்.

பனை சார்ந்த தொழிலி
லீடுபட்டிருக்கும் பெண்களை
யும், யுத்த கால பொருளா
தார அமைப்பினால் வறு
மைக் கோட்டிற்குக் கீழ் தள்
ளப்பட்ட பெண்களையும்
ஒருங்கிணைத்து உழைக்கும்
மகளிர் அபிவிருத்தி நிறுவ
னம் என்ற பெயரில் 10 பேர்
கொண்ட குழுக்கள் கிராமங்
கள் தோறும் அமைக்கப்பட
வுள்ளன. இக் குழுக்களுக்கு
நிதி உதவி, முகாமைத்துவப்
பயிற்சி ஆகியன வழங்கப்
படும். இவர்கள் உற்பத்திப்
பொருட்களுக்கு நிரந்தர
சந்தை வாய்ப்புக்களும் ஏற்
படுத்திக் கொடுக்கப்படும்-
இவ்வாறு பனை அபிவிருத்
தித் தலைவர் நடராசா
தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசு
கையில், பனம் பழத்திலி
ருந்து வருடமொன்றுக்குப்
பருவகாலத்தில் 25,000 மெற்
றிக் தொன் பழச்சாறு பெற்
றுக் கொள்ளலாமென்றும்
இதில் 10% பயன்படுத்தி
னால் கூட உலகச் சந்தை
யில் பெருமளவு லாபத்தை
ஈட்டலாம் என்றும், ஜெர்
மனியர் இதில் அக்கறை
கொண்டு ஆராய்ச்சி பல
செய்துள்ளார்கள் என்றார்.

பொதுசனத் தொடர்பு
உத்தியோகத்தர் வி. சி. தங்க
வேலும் தமது கருத்துக்க
ளைத் தெரிவித்தார்.

## திக்கம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒப்பரேஷன் இந்தியஇராணுவ
நடவடிக்கைகளின் போது பா
திப்புக்குள்ளாகியது என்பது
குறிப்பிடத்தக்கது.

மணித்தியாலம் ஒன்றுக்கு
500 கலன் மதுசாரம் திக்கம்
வடிசாலையில் வடிக்கலாம்
எனத்தெரியவருகிறது.

## புனாவையில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
வுக்கும் இடையே உள்ள
புனாவை எனுமிடத்திலேயே
மேற்படிச் சம்பவம் இடம்

# இந்தியத் தமிழரை நாடுகடத்த துறைமுகம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)
தலைமன்னார் துறைமுகம்
திறப்பதற்கான ஏற்பாடுகள்
அனைத்தும் முழுமூச்சுடன்
நடைபெற்று வருகின்றது. இந்
நடவடிக்கைகள் யாவும் முடுக்
கிவிடப்பட்டதற்கான கார
ணம் மிகவிரைவில் ஒரு லட்
சம் மலையகத் தமிழர்களை
தென் இந்தியாவிற்கு சிறீமா
சாஸ்திரி ஒப்பந்தத்திற்கிண
ங்க நாடுகடத்துவதற்கே
என்று யாழ் சுங்கத்திணைக்
கள பணிப்பாளர் கருத்து
வெளியிட்டுள்ளார்.

மேலும் தாம் சுங்கப்பணிப்
பாளர் நாயகத்தின் கட்ட
ளைக்கிணங்க தலைமன்னார்
இந்திய படகு சேவை ஆரம்
பிக்குமிடத்து மன்னார் துறை
முகத்தை புனருத்தாரணம்
செய்யுமுகமாக அங்கு சென்று
அழிவுகள் பற்றி கணக்கிட்டு
வந்துள்ளதாகவும் அவர் தெரி
வித்தார். (லோ

## மறுமலர்ச்சி கழகம்

# நாம் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல

(யாழ்ப்பாணம்)
தமது சுயநல நோக்கங்க
ளுக்காக பல்கலைக் கழகத்தில்
பொறுப்பு வாய்ந்த பதவியில்
இருக்கும் ஒரு சில நிர்வாகத்
தினர் எமது கழகத்தை முற்
றாக அழித்தொழிக்கும் நட
வடிக்கையில் இறங்கியுள்ளனர்
என யாழ். பல்கலைக்கழக
மறுமலர்ச்சிக் கழகம் வெளி
யிட்ட ஓர் அறிக்கையில் குறிப்
பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில்
குறிப்பிடப்பட்டிருப்பதாவது
யாழ். பல்கலைக் கழக மறு
மலர்ச்சிக்கழகமானது கடந்த
பத்து ஆண்டுகளாகப் பல்
சந்ததிக்காகச் சேமித்துவைக்
கப்பட்ட பெருந்தொகையான
புத்தகங்களும் சூறையாடப்
பட்டுள்ளது இத்தகைய நட
வடிக்கைகள் எமக்கு அதிருப்
தியையும் அதிர்ச்சியையும்
ஏற்படுத்தி உள்ளது. மேலும்
எமது செயற்பாடுகளை ஒடுக்
கும் குரூர எண்ணத்துடன்
நாம் பயமுறுத்திக் காரியங்க
ளைச் சாதித்து வருவதாகவும்
சுமத்தப்பட்ட குற்றங்களை
யும்எமது கழகம் வன்மையாக
கண்டிக்கிறது.

பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவி செல்வி சிவாந்தினி நடராசா கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்திய அகில இலங்கை பேச்சுப் போட்டியில் மேற் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கீரிமலை சிவநெறிக் சழகம், புலோலி சவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்பன நடத்திய பேச்சுப் போட்டிசளில் முதற் பரிசுகளைத் தட்டிக் கொண்டும் உள்ளார்.

இலங்கை மின்சாரசபை முன்னாள் பிரதம லிகிதர் திரு. ஆ. நடராசாவின் புதல்வியான செல்வி சிவாந்தினி ''சின்னமணி குழுவினரின்'' ''கம்பரும் கலைவாணியும்'' வில்லுப் பாட்டு நிகழ்ச்சியின் பிரதம பாத்திரமாகவும் புகழ் பெற்றவர். (21)

மேலும் திரு. பஸதியாம் பிள்ளை பேசுகையில் பெருந்தோட்டத்துறையில் பெரும் அளவு பொருளாதாரம் உருவாகியதால் பெருந்தொகையான தொழிலாளர்கள் ஆசை வார்த்தை காட்டி அழைத்து வரப்பட்டார்கள் புதிய கனவுகளோடு வந்தவர்கள் அடிமைகளைப் போல நடத்தப் பட்டார்கள்.

இவர்களின் வருகைக்கு பின்னர் தெயிலை செழித்து வளராலாயிற்று. பொருளாதாரம் பெருகியது ஆனால் இவர்கள் வாழ்வு துன்பம் சூழந்ததாக இருந்தது. இவர்களின் வசிப்பிடங்கள் மிகவும் மோசமாக இருந்தது அன்றிலிருந்து இன்றுவரை அதே வதிவிடங்களில் தான் வாழ்கிறார்கள்.

இந்த பெருந்தோட்டத் துறை உழைப்பை தவிர வேறு ஒன்றுமறியாத இந்த மக்களுக்கு எந்த ஒரு அமைப்பும் ஆரம்பகாலங்களில் இருக்க இந்த பெருந்தோட்டத்துறை ... தார்கள், (27)

## ஒழுங்கான விண்ணப்பங்களாயின் பாஸ்போர்ட் விநியோகம் துரிதமாகும்

(கொழும்பு)

பிரான்சிலிருந்து பாஸ்போர்ட் வழங்கப்படுவதற்கான புத்தகங்கள் தருவிக்கப் படவுள்ளன. அண்மைக்காலத்தில் பாஸ்போர்ட் கோரி குடிவரவு குடியகல்வு இலாகாவுக்கு விண்ணப்பங்கள் வந்து குவிந்தவண்ணம் உள்ளன. பிரான்சிலிருந்து 8 இலட்சம் புத்தகங்கள் தருவிக்கப்படவுள்ளது.

பாஸ்போர்ட் கோரி விண்ணப்பிம்பவர்களில் பெரும் பாலோர் மத்தியகிழக்கு நாட்டிற்கு வேலைவாய்ப்புத் தேடி செல்வோராகவும் மாணவர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு நாளுக்கு 1500 - 2000 வரை பாஸ்போர்ட் விண்ணப்பங்கள் குடிவரவு குடியகல்வு இலாகாவுக்கு வந்து சேருகின்றன. ஆனால் நாள் ஒன்றுக்கு 1500 பாஸ்போர்ட்டுகள் தான் விநியோகிக்கப்படுகின்றன.

பாஸ்போர்ட்டிற்கு அனுப்பப்படும் விண்ணப்பங்களில் தரப்படும் தகவல்கள் சரியான தாக இருப்பின் துரிதமாக பாஸ்போர்ட் வழங்கல் நடைபெறும்என்றும் ஆனால் பிழையான தகவல்கள் வழங்குவோரால் எப்போதுமே தலையிடியாகவுள்ளது எனவும் கட்டுப்பாட்டாளர்இரத்நாயக்கா தெரிவித்தார். பிறப்புச் சான்றிகழ் அடையாளஅட்டைகள் என்பவற்றில்தான் பெரும் மோசடிகள் செய்யப்படுகின்றன.

கடந்த வாரம் குடிவரவு குடியகல்வு இலாகாவுக்கு விஜயம் செய்த பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா பாஸ்போர்ட் விநியோகம் செய்வதில் சரியான ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

உதவிகள் வழங்குவதன்மூலம் பனை உற்பத்திப் பொருள்களின் தரம் உயர்த்தப்படும் என்றார்.

பனை சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் பெண்களை

## மாணவருக்கா. பொது மண்டபம் அமைக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் பயிற்சி நெறிகளில் ஈடுபட்டுவரும் வைத்திய பீட மாணவர்களின் நன்மை கருதி ஒரு பொது மண்டபம் அமைத்துத் தரும்படி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கோரியுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் இது சம்பந்தமான தீர்மானம் அடுத்த வாரமளவில் நிர்வாக கூட்டம் கூட்டப்பட்டு தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார். (லோ)

## ஊனமுற்றோரை அந்நியப்படுத்தாதீர்கள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் மத்தியில் ஊனமுற்றோர் பற்றிய அறிவையூட்டி, அவர்களுக்கு உதவியளிப்பது சம்பந்தமாக யாழ். மாநகர சபை அலுவலகத்தில் நேற்று கருத்தரங்கொன்று நடை பெற்றது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வீ. பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் யுனிசெப் அமைப்பைச் சேர்ந்த இரு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

ஊனமுற்றவர்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களைச் சமூகத்தில் பூரணமான மனிதராக்குதல் மற்றைய மனிதர்களோடு அந்நியப் படுத்தாமல் அவர்களையும் சகல சுதந்திரத்துடன் வாழச் செய்தல் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டு, இதற்கான குழு ஒன்றும் நேற்று அமைக்கப்பட்டது.

மேற்படி குழுவிற்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். ஊனமுற்றோர் சங்கத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் இதில் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஆரியகுளம் சந்தியில் மினிபஸ் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் நேற்று மாலை ஆரியகுளம் சந்தியில் ஐஸ்கிறீம் வான் ஒன்றுடன் வேசமாக வந்த மினிபஸ் மோதிக்கொண்டது. எவருக்கும் காயமில்லையாயினும் ஐஸ்கிறீம் வானின் முன்பக்கம் கடுமையாகச்சேதமடைந்தது. வீதியில் கண்ணாடித்துண்டுகள் பரவிக் கிடக்கின்றன. சில நடுவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியால் ஐஸ்கிறீம் வான் காரருக்கு மினிபஸ்காரர் மூவாயிரம் ரூபாய் சேதத்தை ஈடுபடுத்துவதற்குக் கோடுக்க ஒப்புக் கொண்டதாகக் கூறப் படுகிறது.

## பாலைதீவில் திருப்பலிப் பூசை

(விசேட நிருபர்)

பாலைதீவிலிருந்து யாத்திரிகர்சள் திரும்பி விட்டனர். இம் முறை திருநாள் பூசைகள் நடைபெறமாட்டாதென்று அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

4 ஆம் திகதி ஞாயிற்றிக் கிழமை பாலைதீவுக்கு வருகை தந்த இரணைதீவுப் பங்குத் தந்தை வண - பிதா ஜெயக்குமார் அடிகள் யாத்திரிகரின் வேண்டுகோளின் பேரில் திருப்பலி ஒப்புக் கொடுத்து புனித அந்தோனியார் செருபத்தைத் தூக்கி தேரில் வைத்து இறக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வழமை போன்று தேர்ப் பவனி இடம்பெறவில்லை. உண்டியலில் சேர்ந்த பணத்தை பங்குத் தந்தை எடுத்துக் கொண்டு திரும்பினாரென்றும் அறியப்படுகிறது. (21)

## தொண்டர் ஆசிரியர் நியமனம்

(யாழ்பாணம்)

அரசினர் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களைப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பங் (22-02-1990) அரசாங்க வர்த்தகமானிப் பத்திரிகையில் கோரப்பட்டுள்ளது. இவ் நியமனம் தொடர்பாக முன்பு விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

### ஈழத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

#### பொரிக்கும் சட்டியில் நண்டுபோல் பெருமாள்

பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டுபேசிய பாதுகாப்பு ராஜாங்க வெளி விவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பேசுகையில் ''பொரிக்கும் சட்டியில் அகப்பட்ட நண்டுபோல வரதராஜப் பெருமாள் சிக்கித் தவிக்கிறார் என்று சொன்னார்.

''வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதி உரிய காலத்தில் நடவடிக்கை எடுப்பார்'' என்றும் அமைச்சர் விஜேரத்தினா சொன்னார்.

திரு. பெருமாள் சமர்ப்பித்த பத்தொன்பது கோரிக்கைசளும் அர்த்தமற்றவை என்று கூறிய அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா, வரதராஜப் பெருமாளுக்கும் அவரின் சகாக்களுக்கும் வழங்கப்பட்ட இந்தியப் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பை விலக்கிக் கொள்ளும்படி இந்தியத் தூதுவரிடம் தாம் கேட்டிருப்பதாகவும் கூறினார்.

### திக்கம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பரேஷன் இந்தியஇராணுவ நடவடிக்கைகளின் போது பாதிப்புக்குள்ளாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

மணித்தியாலம் ஒன்றுக்கு 500 கலன் மதுசாரம் திக்கம் வடிசாலையில் வடிக்கலாம் எனத்தெரியவருகிறது.

### புனாவையில்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கும் இடையே உள்ள புனாவை எனுமிடத்திலேயே மேற்படிச் சம்பவம் இடம் பெற்றது.

கொள்ளையர்கள் குறிப்பிட்ட இரு பஸ்களை மறித்து துப்பாக்கிகொண்டு மிரட்டி கொள்ளையில் ஈடுபட்டிருந்த போதுஅவ்வழியால் வேறொரு தனியார் பஸ் வந்ததாம். அதைக் கொள்ளையர்கள் வழி மறித்தபோது அந்தபஸ் நிறுத்தப்படாமல் வேகமாய் ஓடி மறைந்ததாகவும் கூறப்படுகிறது.

இலங்கை இராணுவ முகாமொன்றிற்குச் சமீபமாகவே இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என்றும் இக் கொள்ளையர்கள் 'தமிழ்' மொழியிலேயேபயணிகளோடு பேசினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் பின்னர் கொழும்பிலிருந்து யாழ். நோக்கிவந்த வாகனங்கள் மதவாச்சியில் நிறுத்தப்பட்டன என்றும் நேற்றுக் காலையே மீண்டும் அவ் வாகனங்கள் யாழ்ப்பாணத்திற்கான பயணத்தை தொடர்ந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இப்பாதையில் வடபகுதிப் பயணிகளிடம் கொள்ளையிடப்படுவது குறிப்பிடத்தக்கது. (தி)

### பட்டதாரிகளுக்கு....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நியமனம் பெறுபவர்கள் நாளை பிற்பகல் 2-00மணிக்குப் பி யாழ். கல்வித் திணைக் களத்தில் நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் இவற்றை பெறவரும்போது பட்டதாரிச்சான்றிதழ், அதன் பிரதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கடிதப் பிரதி போன்றனவற்றை கொண்டு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (தி)

மறுமலர்ச்சி கழகம்

## நாம் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல

(யாழ்ப்பாணம்)

தமது சுயநல நோக்கங்களுக்காக பல்கலைக் கழகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஒரு சில நிர்வாகத்தினர் எமது கழகத்தை முற்றாக அழித்தொழிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகளாகப் பல்கலைக்கழகத்தில் ஒரு முழுமை பெற்ற அமைப்பாக செயற்பட்டு வந்தது யாவரும் அறிந்த விடயமாகும்.

எனினும் கடந்த இரண்டரை வருடங்களாக அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையாலும் அதன் துணை நின்ற அடிவருடிகளாலும் எமது செயற்பாடுகள் அடக்கப்பட்டதால் நாம் மறைமுகமாகச் செயற்பட வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகியது. இக்காலகட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமது சுயநலநோக்கங்களுக்காகப் பல்கலைக் கழகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஒரு சில நிர்வாகத்தினர் எமது கழகத்தை முற்றாக அழித்தொழிக்கும்நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். இதன் ஓர் அம்சமாக எமது செயற்பாடுகளிற்கென ஒதுக்கப்பட்ட அலுவலக அறையினை எமது அனுமதியின்றி வேறு ஓர் ஒன்றியத்தின் பாவனைக்காக ஒதுக்கியதும் எமது ஆவணங்கள் அனைத்தும் எரிக்சப்பட்டதும் இத்தகைய நடவடிக்கையாகவே கருதுகிறோம்.

மேலும் எமது எதிர்காலச் சந்ததிக்காகச் சேமித்துவைக்கப்பட்ட பெருந்தொகையான புத்தகங்களும் சூறையாடப்பட்டுள்ளது இத்தகைய நடவடிக்கைகள் எமக்கு அதிருப்தியையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது. மேலும் எமது செயற்பாடுகளை ஒடுக்கும் குரூர எண்ணத்துடன் நாம் பயமுறுத்திக் காரியங்களைச் சாதித்து வருவதாகவும் சுமத்தப்பட்ட குற்றங்களையும்எமது சழகம் வன்மையாக கண்டிக்கிறது.

சமூக ரீதியான பிரச்சினைகளுக்கு விஞ்ஞான ரீதியான தீர்வுகாண முயல்வதே எமது இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்கு எதிராக இருப்பவர்களை நாம் கண்டிக்கிறோம். ஆனால் நாம் எக்காரணம் கொண்டும் உங்கள் கருத்துச் சுதந்திரத்தை பறிக்க முயலவில்லை முயலவும் மாட்டோம் என உறுதி கூறுகிறோம் என அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

### மாத்தயா..

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

அம்சம் பிரதானமாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது. கொழும்பில் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் குழுவினர் இன்று வவுனியா வருவார்கள் எனஎதிர்பார்க்கப்படுகின்றது

### மேன்முறையீடு....,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாம். விசாரணைகளை மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு வருவதால்த்தான் இந்தத் தாமதம் எனத் தெரியவருகிறது. இதனால் மேன்முறையீடு பற்றிய விசாரணை நடைபெறும் திகதிகளில் ...ன் ஏருமாறு மாற்றம் ...யேற்பட்டுள்ளது. மேன்முறையீடு பற்றிய விசாரணை யாழ். கல்வித் திணைக்களத்தில் இடம் பெறும்.

| | | |
|---|---|---|
| 1990.03.06 | சாவகச்சேரி | ...அதிபர் பிரிவு |
| 1990.03.07 | பருத்தித்துறை, கரவெட் | ,, |
| 1990.03.08 | சண்டிலிப்பாய் | ,, |
| 1990.03.09 | சங்கானை, தெல்லிப்பன | ,, |
| 1990.03.10 | நல்லூர் | ,, |
| 1990.03.11 | நல்லூர், யாழ்ப்பாண | ,, |
| 1990.03.12 | பருத்தித்துறை | ,, |
| 1990.03.13 | உடுவில் | ,, |
| 1990.03.14 | கோப்பாய் | |

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.